# நூறாசிரியம்

[ இரண்டாம் பகுதி ]



பெருஞ்சித்திரனார்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# நூறாசிரியம்

(இரண்டாம் பகுதி)

(இரண்டாவது 10 பாட்டுகள்)

பெருஞ்சித்திரனார்

# நூறாசிரியம்

(இரண்டாம் பகுதி)

(இரண்டாவது 10 பாட்டுகள்)

முதற் பதிப்பு: 1000 படிகள்)

தி. பி. 2012, விடை 31 (13—6—81)

7.00

[redacted]

விலை உருபா மூன்று

(இந்நூலையோ, நூற்பகுதியையோ
எவ்வகையானும் பயன்படுத்திக் கொள்க.
ஆசிரியர் ஒப்புதல் பெறுக).

மறைமலை அச்சகம்,
புன்செய்ப் புளியம்பட்டி-638459
பெரியார் மாவட்டம்.



# பொது முன்னுரை

'**நூறாசிரியம்**' எனும் இந்நூல் நூறு ஆசிரியப் பாக்களைக் கொண்டது. ஆசிரியப்பாக்கள் அகவற் பாக்கள். ஆசிரியம் என்பது யாப்பையும், அகவல் என்பது ஓசையையும் குறிக்கும். ஓசையால் பெயர் பெறுவது ஆசிரியம் ஒன்றே. 'சீர்சால் அகவல்' எனும் சிறப்புறப் பேசப் பெறுவதிப் பா வகை. இப் பா வகை 'ஆசிரியம்' எனப்படுவதால் இதன் தலைமை நிலை விளங்கும். பழஞ் செய்யுட்களுள் இதுவே பெரும்பான்மையாக நிற்கும் பா வகையாம். எளியார்க்கு எளியதும் வலியார்க்கு வலியதுமான இப் பா வகை, தமிழ் யாப்பு முறையில் முதல் தோற்றமாகவும் இருத்தல் வேண்டும் என்றும் கருதற்பாலது.

இதன் பெரும்பாலான பாக்கள், 'தென்மொழி' முதன் முதல் தொடங்கப் பெற்று, இடை நின்ற ஓராண்டுக் காலத்து (5—9—1961 தொடங்கி 21—11—1962 முடிய) எழுதப் பெற்றன. (பிற, சில ஆங்காங்கே காலங் கருதி எழுதப் பெற்று, இதனுள் சேர்க்கப் பெற்றன.) கிடைத்த ஓய்வு வீணே கழிய ஒருப்படாத என் உணர்வுள்ளம் இந்நூலின்கண் நின்று திளைத்தது என்று கூறின் மிகையாகாது.

பாகுபாடின்றி அவ்வக்கால் எழுந்த உணர்வுகளையெல்லாம் ஒருங்கு திரட்டி எழுதப் பெற்றது இந் நூல். உண்மையும் திண்மையும் வாய்ந்த கருத்துகளை யாவரும் அறிதற் பொருட்டு இந்த யாப்பைத் தேர்ந்தெடுத்தேன். பாத்தளைகளால்

பெரிதும் கட்டப் பெருமல் சிறுசிறு சீர்களால் தொடுக்கப் பெற்ற பாவடிகள் நிரம்பியவாகலின், இப் பாக்கள் அருமுயற்சியின்றி ஐந்தாறு முறை படித்த அளவிலேயே மனத்தகப்படுத்தும் தன்மை வாய்ந்தவை. இவற்றின் பிற சிறப்புகள் படிப் பாரின் உணர்வுக்கும் அறிவுக்கும் கண்ணேட்டத் திற்கும் உரை கற்களாக நிறுத்தப்பட்டன.

இதிலுள்ள நூறு பாக்களும் வேறு வேறு கருத்துகள் பற்றி யியங்குவன. பாடல்கள் அகம், புறம் என்னும் இரு திணைகளாகவும், பல்வேறு துறைகளாகவும் பகுக்கப் பெற்றுள்ளன. காலம் ஒட்டிச் சில புதுமுறைக் கருத்துகளும் இதில் சேர்க் கப் பெற்றுள்ளன.

பாடல்களுக்குப் பொழிப்பும் விரிப்பும் கொடுக் கப் பெற்றுள்ளன. தமிழ் நலம் நாடுவோர்க்கும், இலக்கிய நயந் துய்ப்பார்க்கும் அவை பெரிதும் துணையாக விருக்கும். புரையும் கறையும் நிறைந்த போலி இலக்கியப் படைப்பு மிகுந்த இக்காலத்து. நிறையும் விரையும் கலந்த இத்தகைய நூற்கள் வாழ்க்கைக்கு ஒளியும் வழியும் காட்டுவன என் பதைப் படிப்பார் தெள்ளிதின் உணர்வர்.

விரைவில் இதன் அடுத்த பகுதிகளும் வெளி வரும்.

அன்புநிறை,

**பெருஞ்சித்திரன்,**



# சிறப்பு முன்னுரை

நூறாசிரியம்—இரண்டாம் பகுதி எனும் இந் நூல் இரண்டாம் பத்துப் பாட்டுகளையும் உரைகளையும் கொண்டது.

இது, கோவை, பெருஞ்சித்திரனார் நூல்வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப் பெறுகிறது.

நம் நூல்கள் காலத்தால் வெளிவர வேண்டும் என்பதும், அவற்றால் தமிழின மக்கள் பயன் பெற வேண்டும் என்பதும், நூல் வெளியீட்டுக் குழுவினரின் கொள்கை. வாணிக நோக்கமும், மிகுந்த ஊதியக் கொள்ளையடிப்பும் அவர்களின் மன விருப்பமாக இருத்தல் இயலாது. ஏனெனில், நம் நூல்கள் அவற்றிற்கு நேர்மாறான விளைவுகளையே அவர்களுக்கு உண்டாக்கித் தருவன.

எனவே, உண்மைத் தமிழ்த் தொண்டும், நேர்மையான இன முன்னேற்றமுமே கருதி, பெருஞ்சித்திரனார் நூல் வெளியீட்டுக் குழு, இது போலும் நூல்களை வெளியிட உறுதி கொண்டிருத்தல் வேண்டும்.

அவர்களின் உறுதிக்கும், துணிவிற்கும் என்றும் நம் நன்றியும் வாழ்த்தும் அவர்களுக்கு உண்டு.

அவர்கள் முயற்சி வெல்க.

தமிழினம் அவர்கள் முயற்சிக்குத் தோள் தந்து துணை நிற்குமாக!

மேழம் 19, தி.பி.2012,<br>
1—4—81, சென்னை-5

அன்பு நிறை,

**பெருஞ்சித்திரன்**

# பதிப்புரை

ஓர் அறிஞனுடைய அறிவாக்கம் விரைந்து மக்கள் கைக்குச் சென்று சேர வேண்டும். அப்பொழுது தான் அவ்வறிவின் விளைவு விரைவில் மலர்ச்சியுற்று மக்களுக்குப் பயன் கிட்டும். ஆனல் நம் நாட்டின் பொருள் வாய்ப்பின்மையினுலேயே உண்மையான அறிவு மக்களுக்குச் சென்று சேராமலிருக்கவும், பொருள் வளம் என்னும் முதலீடு ஒன்றே வாய்ப்பாய் அமைவதால், கொள்கை, கட்சி என்ற பெயரால், மக்களிடம் பொய்யும், புனைசுருட்டுகளும், காம இழிதகைக் கதைகளும், இளைஞர் உள்ளத்தைப் பாழ்படுத்தும் இதழ்களும், வண்ண ஓவியங்களும் மலிந்து விற்பனைக்குக் கிடைக்கவும் காண்கிறோம். இவ்வாணிகச் சூழலில் அறிவுத் தொண்டாற்றுவது என்பது கடுமையினும் கடுமை. இங்கேயுள்ள சாதி, சமய, கட்சிப் பூசல்கள், தனி மாந்த விருப்பு வெறுப்புகள் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், அறிவுக் கொள்கையின் வழி அமைந்த இயக்கம் என்பது, ''இருட்டு வேளையில், இருசகன்ற வண்டியினை, முரட்டுக் காளைகளைப் பூட்டிக் கரடுமுருடான பாதையில் வெருட்டிச் செல்வதற்கு ஒப்பாகும்'' என்பதைச் சிறிதேனும் பொதுநல முயற்சியில் ஈடுபட்டவர்கள் நன்கு உணர்வர்.

'இந்த நாடே இப்படித்தான்; அறிவை மதிக்காத நாடு' என்று பொறுப்பை யார் மேலோ சுமத்தி விட்டுத்தம் வலிமையால் இதனை மாற்ற இயலும் என்னும் கடமையினை உணராதவர்கள் பலர். உணர்ந்தவர்களுள்ளும், அவற்றினால் ஏற்படும் தந்நல இழப்புகளைக் கணித்துத் தப்பித்துக் கொள்பவர்களும் பலர். இந் நிலையில் 'பிற நாடுகளில் உள்ளது போல் அறிவு வளரவில்லை; மக்கள் மன வளம் பெற வில்லை' என்று திண்ணைப் பேச்சுப் பேசுவதால் யாது பயன்?

ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளாகத் தன்னுணர்வையே இழந்து போய்விட்ட தமிழினத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் பணியில் வள்ளலார், பெரியார், மறைமலை அடிகளார், பாவேந்தர், அண்ணா, பாவாணர் வரிசையில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகத் தம் குடும்ப நலம் கருதாது, 'முன் புதையுண்ட முத்தமிழ்ச் சிறப்பினை மன்பதைக்குணர்த்தும் 'பாவலரேறு. பெருஞ்சித்திரனார் தம் ஓவா முயற்சியின் அறிவு விளைச்சல்கள் மக்களைச் சென்றடைந்திருப்பின் இக்கால் எவ்வளவோ நன்மை விளைந்திருக்கும்.

கட்சித் தலைவர்களும், பெரும் பொருட் செல்வர்களும் அவரைத் தமக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணி, அஃது இயலாமற் போயினமையின், அவரை மக்களிடையே இருட்டடிப்புச் செய்வது நெடுங் காலம் நீடிக்க முடியாது. அறிவை மதிக்கும் இளைஞர் கூட்டம் முனைந்து செயல்படவும், தம்

வலி அறிந்து, வினை செயல் வகை யறிந்து, உறுதியுடன் இப் பணியை முயன்று முடிக்கும் என்கின்ற ஊக்கத்தின் முதல் விளைச்சல் தான் கோயமுத்தூர், பெரியார் மாவட்டங்களின் 'பெருஞ்சித்திரனார் நூல் வெளியீட்டுக் குழு' வின் இம் முதல் படையல்!

இந் நூல் வெளிவர நூல் முன்பணமாக வும், நன்கொடையாகவும், விளம்பரங்களாக வும் உதவிய தமிழ் நெஞ்சங்களுக்கும், தொகை திரட்டி உதவிய அன்பர்களுக்கும் நன்றி கூறி, தொடர்ந்து இம் முயற்சிக்கு உதவும் அவர்தம் துணையின் துணிவோடு இனியும் இவ் வெளியீடு கள் தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்,

*தி. பி. 2012,*
*விடை 31,*
*13–6–1981,*
*கோவை–5.*

பெருஞ்சித்திரனார்
நூல் வெளியீட்டுக் குழு,
கோயமுத்தூர்.

# நூறாசிரியம்

## [ இரண்டாம் பகுதி ]

## பதினாறாம் பாட்டு

அன்பெனப் புகழ்கோ! அருளென மகிழ்கோ!
என்கொல் பாகர்க் கிடுகறி யென்னா
அறிந்திசின் போதந்த ஏவலற் கெம்மனைப்
பாகற் பசுங்காய்ப் புளிக்குழை யட்டுத்
தாய்தர மிசைந்த தகவுரைத் தெங்கோ
அதுநயந் தருந்தா ராகலின் அதுமற்றுப்
பிறகொளக் கூறுகோ வென்றலு மவன்மீண்டுப்
பெய்துகத் தந்த திவக்காண்; முழுத்தும்
பைம்பருக் கொழும்புடை பாகல்;
ஐதகைக் கென்யான் நோற்ற வாறே!

### பொழிப்பு :

(இந் நிகழ்ச்சியை) அன்பென்று புறத்தே புகழ்வேனோ? அருளென அகத்தே மகிழ்வேனா? 'என்ன வேண்டுங்கொல்? சமைக்கப் பெறும் நாட் குழம்பிற்கு இடுகின்ற கறி' என என்பால் அறிந்து போக வந்த ஏவலனிடம், எம்மனையின் கண் பசிய பாகற்காயினைப் புளிக்குற்றிக் குழையாகச் சமைத்து, என் தாய் தர யான் விரும்பியுண்ட தன்மையைக் கூறி, என் தலைவன் அக்குழம்பினை விரும்பி அருந்தாராகலின்,

அப் பாகற்காய் தவிர (அவர் விரும்பும்) பிற யாதாயினும் வாங்கித் தரக் கூறுவாயாக என்று யான் கூறினேனாக அவன் அது கேட்டுப்போய், மீண்டும் வந்து யான் மகிழுமாறு கொட்டித் தந்தவற்றை இதோ, ஈங்குக் காண்பாயாக; முழுவதும் பசிய பருக்களை யுடைய கொழுவிப் படைத்த பாகற்காய்களை; (என் நலமே கருதும் என்) தலைவரின் பெருந்தகைமைக்கு யான் நோற்ற வகை என்னே!

## விரிப்பு :

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது. என்னை? அகத்துப்படும் தலைவனின் அன்பைப் புறத்துப் புலப்படக் கூறினளாயின் புறம் என்க.

தலைவன்மாட்டுக் கண்ட சிறந்ததோர் அன்பு நிகழ்ச்சியைத் தோழிக்குக் கூறி, அவன் தன்பால் கொண்ட பரிவை அன்பென்று புகழ்தல் தகுமோ, அருளென்று மகிழ்தல் தகுமோ? என்று வியந்தும் அத்தகையானை இல்லறத் தலைவனாக அடையப் பெறற்கு யான் நோற்ற தவத்தின் அளவுதான் என்னை? எனப் பெருமிதம் படவும் தலைவி கூறுவதாக அமைந்ததிப் பாடல்.

அன்பு : தன் நலம் கெடாமல் பிறர் நலம் பேணக் காட்டும் மன நெகிழ்ச்சி! சொள்வார் கொளப்பெற்றார் இருவர்க்கும் நலமே பெருக்கும் மனவுணர்வு. இருவர் மனத் தட்டுகளையும், சமனுற நிறுத்தும் உணர்வுத்துலை (தராசு) கொண்டார் இருவருள் ஒருவரைக் களிப்பவும், பிறிதொருவரைக் கனப்பவும் செய்யாமல், ஒரே பொழுதில் இருவரையும் இன்பினும் துன்பினும் அழுத்தும் வல்லுணர்வு. (அன்பு = அல் + பு = இரண்டல்தன்மை. பு-பண்புப் பெயரீறு.) அன்பு உலகத்து எல்லா உயிர்களிடத்துங் காணப்பெறுவ

தாகியதொரு நல்லுணர்வெனினும், இது புழு, பூச்சி போலும் அடி நிலை உயிர்களிடத்து மெய்யான் மிகுந்தும், உளத்தான் குறைந்தும் நின்று, ஒன்றை யொன்று ஈர்த்துப் பிணைத்து ஒருணர்வாக்கும் தன்மைத்து என்க. உளத்தான் குன்றி மெய்யான் மிகுதலான், அவ்வுயிர்களிடம் மெய்யுறு புணர்வுக்கே இது பயன்படுவது என்க. எனவே அதற்கொப்பப் பால்வழித் தழுவி நிற்கு மென்க. என்னை? பருப்பொருள்களுள், நேரும் எதிருமாய மின்னூற்றல் கொண்டவை, ஒன்றை யொன்று கவர்ந்திழுத்து உடன்படுதல் போல், அடி நிலை உயிர்களுள் ஆணும் பெண்ணுமாய மின்னோட்டம் கொண்டவை ஒன்றையொன்று கவர இது பயன்படும் என்க. இனி, அவற்றினும் உயர்ந்த பறவை, விலங்குபோலும் நடு நிலை உயிர்களுக்கு மெய்யானும் உளத்தானும் ஒப்பத் தோன்றலின், அவற்றிடம் ஒருகால் மனவுணர்வால் பிறிது நலம் பேணற்கும், மறுகால் உடலுணர்வால் ஊறின்பம் நிகழ்த்தற்கும் பயன்படும் என்றறிக. இனி,முடிநிலை உயிர்களாகிய மாந்தரிடத்து இஃது உளத்தான் மிகுந்தும் மெய்யான் குறைந்தும் நிற்றலால், வாழ்க்கை பேரளவான் பரிமாறும் மனவுணர்வின் வெளிப்பட்டு நினைவின்பமும், சிற்றளவான் பரிமாறும் உடலுணர்வின் வெளிப்பட்டுப் புணர்வின்பமும் தோற்றுவிக்கும் தன்மைத்தாயது. உடலுணர்வு தேய்வுறுங் கால் இது முழுவதும் மனவுணர்வானே ஆட்பட்டு நிற்கும். உடல் பிரிவுறினும் மனப்பிரிவு அன்பாட்சியில் இல்லை என்க.

அருள் : அன்பின் முதிர்நிலை; தன் நலங் கேடுறினும் பிறர் நலம் பேணக்காட்டும் மன நெகிழ்ச்சி. உளத்தின் அரிதாய தன்மை (அரு+உள்–அருள்; அரு–அருமை, அரிய தன்மை.) அன்பு எதிர்வினை கோளும்; அருள் எதிர்வினை கோளாது. எதிர்வினை என்பது காட்டுதற்குக் காட்டப்படுவதும், நீட்டுதற்கு நீட்டப்படுவதுமாய எதிர்விளைவு. இது பயன் அடிப்படையது. இது கடைக்கீழ்நிலை உயிர்கள்பாலும்

தலைமேல்நிலை உயிர்களால் செலுத்தப் பெறுவது. அருள் மேனிலை உயிர்களின் மீமிசை மாந்தக் குணம் துன்ப விளைவை யும் இன்ப நேர்ச்சியையும் ஒன்றெனவே கருதும் தூய உளத் தில் தோன்றி வெளிப்படுவது அருள். பெரும்பாலும் புறத்தே புலப்படத் தோன்ருது அகத்தின் நல்லுணர்வான் கண்டறிவது அருளாட்சி மிக்காருக்கு இவ்வுலகம் வேறு பாடுறத் தோன்ருது. உளத்தின் அருவாகிய தன்மை அருள். அருவாந்தன்மை எவ்வகை உருவானும் பற்றப்படாத நிலை. வெறுப்பு, விருப்பு, தாழ்வு. உயர்வு, இழிவு, சிறப்பு, முன், பின் முதலிய பூதநிலை மாற்றங்களான் உருவாகத் தோற்றி நிற்கும் உருத் தோற்றம் இலவாகும் உளநிலை அருள்; மெய் யறிவு பற்றி நிற்கும் அன்பு. அன்பு உருவான் பற்றப்படுவது. அருள், அருவான் பற்றப்படுவது. அரு+உள்—அருள் என்க.

**அன்பெனப் புகழ்கோ, அருளென மகிழ்கோ :** புறத்தே புலப்படத் தோன்றும் அன்பென்று புகழ்வேனு? அகத்தே புலப்படுத்தும் அருளென மனத்தான் நிறைவுறுவேனு? இல்லறப் பொதுவாயது அன்பு எனினும், அதுதான் மனத் தான் நுகரும் அளவானே நிறைந்திருந்து, இதுகால் புறத்தே புகழுக்குரியதாக நிறைந்து வழிதலாய தன்மையான் புகழுக் குரியதாகலின், புகழ்வேனு என்றும், அன்றித் தன்னுயிரை இரங்குதற் கேதுவாகிய உயிரென்று கருதித் தன்னிலையினும் மீத்துயர்ந்து தன் அக மகிழ்ச்சிக்கே முற்றும் உரியதாகலின் அருளெனக் கருதி மகிழ்வேனே என்ருள் என்க. அன்பு நிகழ்ச்சி பிறராலும் எண்ணிப் புகழ்தற் குரியது என்றும், அருள் தன்னளவானே எண்ணி மகிழ்தற் குரியது என்றும், குறிப்புணர்த்தினுள் என்றபடி.

**என்கொல் பாகர்க்கு இடுகறி என்னு :** நாட்குழம்பிற்கு இடப்படும் கறி என்கொல் வேண்டுவது என்று. பாகர் - குழம்பு.

**அறிந்திசின் போதந்த ஏவலர்க்கு :** கேட்டு அறிந்து போமாறு வந்த ஏவலனுக்கு.

**எம்மனை......... தகவுரைத்து :** எம் மனையின்கண்ணே பாகற்காயினைப் புளிக்குழைத்துச் சமைத்துத் தாய்தர யான் மிசைந்த தன்மையை உரைத்து; எனக்கது மிகு விருப்பம் என்று ஏவலனுக்குப் புலப்படுத்தினாள் என்க. **இசின்**-அசை. **எங்கோ**-எம் தலைவன்.

**அது நயந்து அருந்தார் ஆகலின் :** அதனை விரும்பி உண்ணார் ஆகலின், தனக்காகும் பாகற்காயின் புளிக்குழம்பு, தன் கணவர் விரும்பி யுண்ணுதற் காகாது என்று கூறினாள் என்றபடி.

**அது மற்று :** அது தவிர,

**பிறகொளக் கூறுகோ :** பிற யாதாயினும் அவர் விரும்பி உண்ணுதற்கானவற்றை வாங்கி யனுப்பக் கூறுவாய்.

**என்றலும் :** என்று யான் கூறலும்.

**அவன் மீண்டு :** அவன் கேட்டறிந்து தலைவனிடம் போய் இது கூறி, வாங்கியவாறு மீண்டும் வந்து.

**பெய்து உகத்தந்தது இவக்காண் :** பெய்து, மகிழும்படி தந்தவற்றை இதோகாண் என்று தோழியிடம் காட்டினாள் என்றபடி.

தனக்குப் பாகர்ப் பசுங்காயின் புளிக்குழம்பு விருப்பம் என்று ஏவலனிடம் கூறினாளேனும், அது தன் தலைவர் விரும்பி யுண்ணார் ஆகலின், அது தவிரப் பிற அவர் விரும்பும் கறியினை வாங்கி யனுப்பக் கூற, அவன் இவள் விருப்பம் கண்டு, அது தனக்கு விருப்பம் அன்றெனினும், அதனையே வாங்கி விடுத்த பேரன்பினைக் காண் என்று தோழியிடம் கூறினாள் என்க. இஃது அவன் தன்மேல் இயற்கையாகக் காட்டும்

அன்பினும் மிகவுயர்ந்த உளச்செயல் ஆகுமென்றும், எனவே அஃது அருளின்பாற்படும் என்றும் கருதிக் கூறினுள் எனக் கொள்க.

தான் விரும்பி யுண்ணும் பாகற்காயின் புளிக்குழம்பு அவனுலும் விரும்பப்படுவ தொன்ருக விருந்து, அதனை அவன் தன் பொருட்டு வாங்கி விடுப்பானுயின் அதனை அன்பென்று கருதிக் கொள்வதே இயல்பென்றும், அஃதன்றித் தன் விருப்பம் அவன் விருப்பம் அன்று எனினும், தன் விருப் பத்தினையே செயல்படுத்தித் தன் விழைவு கருதிற்றிலன் என்பதால், அது தன்மேல் இரங்கிச் செய்த செயலாகலின் அஃது அருளே யென்றும் தெளிந்தனள் எனவும் கொள்க.

முழுத்தும் : முழுவதும்.

பைம்பருக் கொழும்புடை பாகல் : பசிய பருக்களை யுடைய கொழுவிப் புடைத்த பாகற்காய். பாகற்காய் தனக்கு மிகு விருப்பமான தொன்ருகலின் அதனை வண்ணித் துக் கூறினுள் என்றபடி.

பாகல் என்னுது பருத்த பாகல் என்றும், வெறும் பருத் தது என்னுது கொழுமையாகப் பருத்தது என்றும் கூறினுள் என்க. பசிய பருக்கள் மிகுந்த பாகல் என்பதால் அதன் பிஞ்சுமை கூறினுள் என்க. பாகல் முதிர்வுறின், அது செம் மஞ்சள் நிறம் படருமாகலின், அஃதன்றிப் பசிய இளங்காய் என்று விதந்து கூறினள் என்றபடி.

ஐ : தலைவன்.

தகை : தகவுடைத்தாம் தன்மை. அருள் நிரம்பிப் பெருமை சான்ற தன்மையான் தகை என்ருள்.

ஐ தகை : தலைவனுகிய தகைவோன்.

என்யான் நோற்றவாறு : யான் இவனைப் பெற எத்தகு பெரு நோன்பு செய்திருத்தல் வேண்டும் என்றபடி.

**நோற்றல் :** நோன்பு கடைப்பிடித்தல்.

**நோன்பு :** தவமிருத்தல். நோல் – பகுதி.

**நோலுதல் :** துயர் பொறுத்தல். தவமிருத்தல், புலன் வேட்கை தள்ளி, தன் மனத்தில் தான் வேண்டுவது பெறக் கருதி அது மேல்தான் நீரும் உணவும் அகற்றி மனமுறுத்து நினைப்பக் கிடப்பது.

நல்ல கணவனைப் பெறல் வேண்டி முற்பருவத்தே பாவையர் இளமை நலம் தவிர்த்து மனத்துக்கண் மாசிலராகி எண்ணிய எண்ணியாங்கு எய்த ஆற்றியிருத்தல்.

தான் விரும்பி ஒன்று கூற, அது தன் விருப்பம் அன்றேனும் தன் விருப்பத்தினையே மேலெனக் கொண்டு, அதனையே செயற்படுத்தத் தன் தலைவன் விரும்பிய அச்செயலை, தலைவி அது தன்பால் கொண்ட அருள்நோக்கு என்று கண்டு, அத்தகைய அருஞ்செயலை அவன் தன் பொருட்டு இரங்கிச் செய்யுமாறும், அத்தகு செயல் புரிதற்கு ஆகிய பெருந்தகைமை பெற்ற அத்தலைவனைத் தான் கணவனுகப் பெற்றதற்கும் எத்துணையளவு நோன்பு பெற்றிருத்தல் வேண்டும் என்று கூறி வியந்தனள் என்க. என்னை? தான் செய்த தவத்தின் அளவு, அது பயன் கொடுக்கும் பொழுதிலன்றி அறியப் பெருதாகையால், அதன் அளவும் பெருமையும் ஈண்டு அவனுல் அறியப் பெற்ருளாகலின், தான் எத்துணையளவு நோன்பு நோற்றிருத்தல் வேண்டும் என்பதும் அதன் பயனுகத் தான் எத்துணையளவு தகைமை பெற்ற தலைவனை அடையப் பெற்ருள் என வியந்து கூறினுள் என்பதுமாம்.

இது புறப் பொதுவியல் என் திணையும், கற்பு முல்லை என் துறையுமாகும்.

# பன்னிரண்டாம் பாட்டு

எவர்கொல் துணையே! கவர்புற் றணையே!
குவடுபட நடந்த சுவடும் மாறாது;
வான்பட் டதிருங் குரலுந் தேயாது;
வல்லுயிர் செகுக்க மாற்றலர் வெரூஉம்
கொல்லயில் விழியின் இமையுங் குவியாது;
முன்னைப் பெருமையின் முங்குபே ருணர்வால்
அன்னைத் தமிழுக்கே அலங்கல் சார்த்தித்
தீச்சுடர் எழுத்தால் பாச்சுடர் கொளுத்தி,
ஓச்சிய தடங்கை வீச்சும் ஓயாது;
உயிருணர் வூரப் பொழிந்துயர் வாழ்க்கைப்
பயிர்செழிப் பூரப் பாடினை கொல்லோ!
இனியே
துவரிதழ்த் தாமரை கவர்துளி மாந்தி
உவப்புற முரலும் கருவண் டொப்ப
இயற்கை தூங்கும் புலவரும் இல்லர்!
மயற்கை அகற்றும் மறவரும் இல்லர்
மருட்சி அகற்றிடு புரட்சியும் இல்லை!
இருள்துயில் கொண்ட தமிழகம் எழவே
அருள்மொழி நெஞ்சத் தறமும் மடிந்தது!
தயிர்கடை மத்தம் ஆகித் தமிழர்
உயிர்கடைந் தெடுக்கும் நின்பெரும் பிரிவால்
உள்ளமும் அறிவும் ஓய்ந்த
கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கே!

## பொழிப்பு :

குன்றம் பொடிந்து படும்படி பெருமிதத்தோடு நீ நடந்து சென்ற காலடிகளும் இன்னும் மறையவில்லை; வானில் தெறித்து அதிரும்படி முழங்கிய நின் குரலொலியும் இன்னும் தேய்ந்து போகவில்லை; வலிந்த உயிர் அழிந்து போகும்படி பகைவர் அஞ்சுகின்றதும் உடலைக் கொல்லுகின்றதும் வேல் போல் கூரியதுமான நின் விழியின் இமைகள் இன்னும் குவிந்து போகவில்லை; முன் நாளைய பெருமையுள் முழுகி எழுந்த பேருணர்வினுல் தமிழன்னைக்குப் புகழ்மாலை சூட்டியும், தீயின் ஒளி நாக்குகள் போலும் எழுத்துகளினுல் பாட்டில் சுடர் கொளுத்தியும், அரசோச்சி நின்ற நின் பெரிய கைகளின் வீச்சும் இன்னும் ஒய்ந்த பாடில்லை. உயிர்களின் உணர்வு மிகும்படிப் பாடல்களை மழையெனப் பொழிந்து உயரிய வாழ்க்கை என்னும் பயிர் செழித்துப் புடை நிரம்பும்படி நீ பாடியிருந்தனையே!

இனியே, சிவந்த இதழ்கள் நிறைந்த தாமரையின் தேன் துளிகளைக் கவர்ந்து அருந்திய உவப்பின் மேலீட்டால் முரலு தல் செய்யும் கரிய வண்டைப் போல், இயற்கையூடு ஒன்றிப் படியும் புலவர் எனப்படுவோரும் இனி இலராக, மக்களின் அறிவு மயக்கம் அகற்றுகின்ற மறவர் எனப்படுவோரும் இனி இலராக; இருள் மண்டி உறக்கம் கொண்டிருந்த தமிழ் நிலம் விழித்து எழும்படி, அருள் மழை பொழியும் அறம் பூண்ட நெஞ்சும் மடிந்துற்றதாக. தயிரை அலப்பிக் கடைகின்ற மத் துப் போலும், தமிழரின் உயிரைக் கடைந் தெடுக்கின்ற நின் னுடைய பெரும் பிரிவினுல் உள்ளமும் அறிவும் ஒய்தல் நின்ற கள்ளமற்ற உணர்வினுர் கனிந்து நிற்போர் தமக்கு,

எவர் இனித் துணையாவரோ? இறப்பெனும் கள்வனுல் கவர்ந்து கொள்ளப் பெற்றனையே!

## விரிப்பு :

இப் பாடல் புறத் துறையைச் சார்ந்ததாகும்.

பாவேந்தர் பாரதிதாசன் என்னும் கனகசுப்புரத்தினம் மறைந்த ஞான்றை உள்ளக் கவற்சி மீதூரப் பாடிய கையறு நிலைப் பாடல் இது.

பாவேந்தரின் பெருமிதமான போக்கும், தமிழுக்கென ஓங்கி நின்ற குரலும்,தமிழ்ப் பகைவர் அஞ்சிப் புறம் நடுங்கும் நோக்கும், பேரரசன் எனப் பெருமிதங் கொண்டு ஓச்சிய கை வீச்சும், அவர் வாழ்ந்த வாழ்க்கையின் பெரும் பயனும் இன்னும் தமிழர்களின் நெஞ்சங்களில் காட்சியாகி நிற்கும் நிலையினைக் காட்டி, அவர் பெரும் பிரிவால் தமிழர் இழந்த இழப்பையும், அவலத்தையும் தொகுத்துக் கூறியதாகும் இப் பாடல்.

எவர்கொல் துணையே... என்னும் முதலடியினை இறுதியடிக்கு முடிவாகக் கொள்க.

எவர் துணை: என்றமையால் இனித் துணை எவருமிலர் என்றபடி.

கவர்பு உற்றனை: கவர்ந்து கொள்ளப் பெற்றனை. பிறர் விரும்பும் ஒருவரை அவர் விருப்பத்திற்கு மாருகப் பிரித்ததான், கவர்தல் எனக் கூற வேண்டுவ தாயிற்று.

குவடுபட நடந்த சுவடு: குன்றம் பொடிந்து போமாறு நடந்த நடையான் அமைந்த சுவடு. நடைக்குப் பெருமிதங்

காட்ட வேண்டிக் குன்றம் பொடியும் நடை எனலாயிற்று. ஒருவரின் வாழ்க்கைப் போக்கின் பெருமிதப் போக்கினை உணர்த்துவது ஒருவரின் நடையே ஆகலின் நடை முதற்கண் கூறப் பெற்றது. நடை யெனினும் போக்கு எனினும் ஒன்றே யாகி,அவர் வாழ்ந்த பெருமிதமான வாழ்க்கைப் போக்கினைக் கூறிற்று இவ்வடி.

இனி, நடைக்கடுத்து, ஒருவரின் பெருமிதம் அவர் குர லான் வெளிப்படலால் அவர் குரலின் செம்மாப்புக் கூற வேண்டுவதர்யிற்று.

வான்பட்டு அதிருங் குரல்: வானின்கண் பட்டுத் தெறிக் கும் குரல். அதிர்தல்—ஒலித் தெறிக்குதல். ஒருபுடை நின்று எழுப்பிய அவர் குரல் எண்டிசையும் பரந்து பட்டுச் சென்றது கூறப்பட்டது.

மெல்லுயிரைச் சிதைத்தல் எளிதாகலான் வல்லுயிரைச் செகுத்த விழி எனப் பெருமிதந் தோன்றக் கூறப் பெற்றது. உயிரைச் செகுத்தலும், மனத்தை வெருவித்தலும், உடலைக் கொல்லுதலும் செய்யும் அயில்விழி என்று கூறப் பெற்றது.

அயில்-வேல், உயிரை அயிலுதலால் வேல் அயில் எனப் பட்டது. அயிலுதல்-உண்ணுதல்.

அவர் நடந்த மிடுக்கான நடையின் சுவடு தோயாமை யும்,அதிர்ந்த குரலின் செம்மாப்பு இன்னும் அடங்காமையும், பகைவர் அஞ்சும்படிச் செய்து அவர் உயிர் செகுக்கும்படி நோக்கிய பெருமிதம் சான்ற விழி இன்னும் மூடாமையும், அவர் ஓச்சிய தடங் கைகளின் வீச்சு இன்னும் ஓயாமையும் இன்றும் நம்மிடையே இருப்பார் போன்றதோர் உணர்வை எழுப்புகின்றன என்க.

இமை குவிதல்: விழி மூடுதல்.

அவரின் திறந்த விழிகளேயே கண்டு அவரின் மூடிய விழிகளேக் கண்டிலோம் ஆகையால் அவர் பார்வையே இன்னும் நம் நெஞ்சில் உளதாகின்றது.

முங்குதல்: முழுகுதல்.

அன்னேத் தமிழ்: பிற மொழிகளுக்கு அன்னேயாகி நின்ற தமிழ்.

தீச் சுடர் எழுத்து: தீயின் ஒளி நாக்குகள் போன்று சூடு கொளுத்தும் எழுத்து.

பாச் சுடர் கொளுத்தி: பாவின் சுடரை மக்கள் நெஞ்சில் ஏற்றி.

ஒச்சுதல்: உயர அலேத்தல்.

உயிர் உணர்வு ஊரப் பொழிந்து: மாந்தரின் உள்ளுணர்வு மிகும்படி மழைபோற் பொழிந்து.

உயர் வாழ்க்கை...பாடினே: உயர்வு சான்ற மாந்த வாழ்க்கை என்னும் பயிர் செழிப்புற்று நிரம்பும்படிப் பாடினுய் கொல்.

கொல்—அசை. ஓ! இரக்க வுணர்வு தோற்ற வந்தது.

இனியே—நின் மறைவுக்குப் பின்னதாக இனி.

துவர் இதழ்—சிவந்த இதழ்.

தாமரை — தாமரை மலர். தாமம்-கதிரவன். அரை - தண்டு; மலர்-பூ. கதிரவன் கண்டு மலரும் தண்டுப் பூ என்னும் பொருளுடைய தூய தமிழ்ச் சொல். தாமரைப்பூ வென்ற முழுச் சொல் பின் தாமரை என்ற அளவிலேயே பூவைக் குறித் தது.

முரலுதல் —வண்டின் இமிழும் ஓசை.

இயற்கை தூங்கும் புலவர் —இயற்கையோடு பொருந்தி நிற்கும் புலவர்.

புலவர் — அறிவுடையவர். புலம்-அறிவு.

பாவலர்—பா எழுத வல்லவர்.

பாவலரினும் புலவர் சிறப்புடையர். பா எழுதல் ஒரு கலைப் பயிற்சி. ஓவியம், கற்றளி (சிற்பம்) போலும் பா எழுது தலும் ஒரு கலையே. புலமை அப்படிப் பட்டதன்று. இயற்கை அறிவு மிகுந்தது; பொறிகளாலும், புலன்களாலும் உணரப் பெற்ற உணர்வும், அவை வழி மெய்யுணர்வும் மிகப் பெறுதல் புலமை. இனி, பா எழுதுவோனுக்குப் புலமை நிரம்பி யிருத் தல் வேண்டும் என்பதும், அஞ் ஞான்றே அவன் எழுதும் பா செப்பமும், நுட்பமும், திட்பமும் பொருந்தி விளங்கும் என் பதும் பண்டைத் தமிழ் மரபு. இனி, புலமை பெற்றவர் எல் லாரும் பா வழியினனே தங்கள் அறிவுக் கருத்தினைப் புலப் படுத்தினர் ஆகலின் புலவோர் பாவலரும் ஆனர் என்க.

மயற்கை—அறிவு மயக்கம்—அறியாமை.

மறவர் — துணிவு, ஆண்மை மிக்கவர்.

**மருட்சி யகற்றிடு புரட்சி:** மக்கள் மதி திகைந்த நிலையினை யகற்றிக் கீழ் மேலாகச் செய்யும் நிலை. தமிழும், தமிழரும் கீழ்மை யுற்றிருந்த காலை அதனையும் அவரையும் மேன்மை யுறுமாறு செய்த நிலை.

**இருள் துயில்:** இருள் போலும் மண்டிய துயில்.

**அருள் பொழி நெஞ்சத்து அறம்:** அருள் நோக்கான் பொழிவுற்ற நெஞ்சத்தின் அறக் கொள்கை.

**தயிர்கடை.... பிரிவு:** தயிர் மத்தால் அலப்புறல் போல், தமிழர் பாவேந்தர் பிரிவால் அலப்புற்றனர் என்க. தயிர் அலப்புற வெண்ணெய் திரளுதல் போல், பாவேந்தர் பிரிவால் அலப்புறும் தமிழர் நெஞ்சத்து விடுதலை திரளுதல் என்பதைக் குறிப்பால் உணர்த்தியபடி.

**உள்ளமும் அறிவும் ஓய்ந்த கள்ளமில் உணர்வு:** உள்ளத்தாலும் அறிவாலும் நிலை நின்று இயங்கும் கள்ளமற்ற நடுநிலையான உணர்வுடையோர்.

**கள்ளமில் உணர்வின் கனியுநர் தமக்கு எவர் கொல் துணையே என்று கூட்டுக.**

பாவேந்தர் தமிழரிடைப் பிறந்து மொழியாலும், இனத்தாலும் அவர் மறுமலர்ச்சி யுறும்படி ஓர் உணர்வுப் புரட்சியைத் தோற்றுவித்து மறைந்த நிலையில், இனி அவலமுற்ற தமிழினத்திற்கு உற்ற துணை எவரோ? எனக் கவன்று பாடியது. புரட்சி தோன்றிய நிலையில் மறைவுறின் அது முடிவுறுதல் யாங்ஙனே? எவர் துணைக் கொண்டோ? என அரற்றியது மாகும்.

இது பொதுவியல் என் திணையும் கையறு நிலை என் துறையு மாகும்.

## பதின் மூன்றாம் பாட்டு

துணந்த சுறவத்து மணந்த மாணிழை
அணந்த சுறவமுன் அகறல் ஆகின்றே!
புணர்ந்த தோளும் பொலிவழிந் திலையே!
நிணந்த மார்பும் நிமிர்பழி கிலையே
மன்றற் கூறையும் மடிகலைந் திலையே!
கலியெழு கிளைமுன் கவிழ்ந்த புன்றலை
இன்றும் ஏர்ந்தன் றிலையே! எழுதிய
கால்வரிக் கோலமும் கலைந்தன் றிலையே!
சுடரொளி வாணுதல் வெளிறப் பொதிகுழல்
படர்ந்து நிலம்புரள இடை நுடங்கிப்
புறமஞ்சி யுள்ளழுங்கும் புனல்வார் கண்ணொடு
கையற்று ஞெகிழும் கழைமென் றோளிக்கு
உறுநாள் உவப்புற வேண்டி
மறுமணம் புணர்த்தீம் மனைவாழ் வோரே!

### பொழிப்பு :

நீங்கிய (கடந்த) சுறவ ஓரையில் (தைத் திங்களில்) மணந்த ஞான்றை அணிந்த பெருமை மிக்க அணி (தாலி), வர விருக்கின்ற சுறவத் திங்களின் முன் அகலும்படி ஆகிற்றே! கணவனால் தழுவப் பெற்ற தோளும் இளமை ஒளி அழிய வில்லையே! புடைத் தெழுந்து நின்ற மார்பும் நிலை தாழ வில்லையே! மன்றல் நாளில் உடுத்துக் கொண்ட புதிய உடையின் மடிப்பும் இன்னும் கலைய வில்லையே! ஆரவாரம் எழும்பும் கிளைஞர் தம்முன் மணநாட் போதில் கவிழ்ந்த, பொலி விழந்த தலை, இன்றும் நிமிர வில்லையே! அன்று காலின்கண்

எழுதப் பெற்ற அழகிய கோலமும் இன்னும் கலைந்து போக வில்லையே! சுடரென ஒளிரும் வளைந்த நெற்றி வெளிறவும், பொதியப் பெற்ற குழல் அவிழ்ந்து நிலத்தே புரளும்படிப் படர்ந்திருப்பவும், இடை துவளவும், புறத்தே இருப்பார்க்கு அஞ்சியவாறு, அகத்தே மிகுதுயரால் நீர் வழிந்த கண்களோடு செயலற்றும், உடல், உள்ளம், உயிர் தளர்வுறவும் கிடவா நின்ற இள மூங்கில் போலும் மென்மை வாய்ந்த தோள்களை யுடைய இவளுக்கு, இனி, வரவிருக்கின்ற நாள்கள் மகிழ்வுறு மாறு இருத்தலை விரும்பி, மற்றும் ஒரு முறை மணம் செய்வீ ராக, மனைக்கண் வாழ்தலை மேற்கொண்டு நிற்பீராகியநீவிரே!

## விரிப்பு :

இப்பாடல் புறத் துறையைச் சார்ந்ததாகும்.

மணமுடிந்து ஓராண்டிற்குள் கணவனை இழந்த இளம் பெண் ஒருத்திக்கு மறுமணம் புணர்த்துமாறு மனை வாழ் வோருக்குச் சான்றோர் ஒருவர் அறிவுறுத்தியதாக அமைந் ததிப் பாட்டு.

கணவற் றுறந்த நங்கை ஒருத்தியின் இளமைக் கொழிப் பினையும், இல்லறந் தோய்ந்து இளமை நலந் துய்க்கா அவ ளின் துயர் மண்டிய சூழலையும் எடுத்துக் காட்டி, அவளின் எஞ்சிய வாழ்வின் இன்பத்தை உறுதிப்படுத்திக் குமுகாயத் திருத்தத்தைச் செய்ய வற்புறுத்திக் கூறுவதாகும் இப் பாடல்.

தணந்த சுறவத்து மணந்த மாணிழை: நீங்கிய சுறவ மாதத்தில் மணஞ் செய்தலாற் பெற்ற பெருமை மிக்க அணி. தணத்தல் - நீங்கல், போதல், கடத்தல். தள் என்னும் வேர்ச் சொல்லடியாப் பிறந்த சொல் தணத்தல். (தள்-தள்ளு-

தளர்வு முதலிய சொற்களை ஓர்க).சுறவம்—முதலை—மகரம் (வ. சொல்) ஊதை மாதம். கதிரவன் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு மீன் கூட்டத்தினிடையே புகுவதாகும் நிகழ்ச்சியின் அடிப்படையாக அமைக்கப் பெற்றன மாதப் பிரிவுகள். மீன் கூட்டம் ஓரை எனப்படும். அவற்றை அடையாளம் கண்டு கொள்ள ஒவ்வோர் உருவத்தினை அக் கூட்டங்களுக்குக் கற்பனையாகப் பொருத்தி வழங்கினர் பண்டை வானியலார். பின்னை, அவ்வவ் வுருவங்களின் பெயரே அவ்வம் மாதங்களுக்குரிய பெயர்களாக வழங்கின. பண்டைத் தமிழர் மாதங்களின் பெயரை ஓரைப் பெயர்களாகவே வழங்கினர். இடையில் வந்த ஆரியர் அத்தூய் தமிழ்ப் பெயர்களையெல்லாம் வட சொற்களாகத் திரித்து வழங்கினர். அரசச் செல்வாக்காலும், சமயப் புனைவுகளாலும் மக்களிடை அவர் பெருமை யுற்ற பொழுது,அவர் அமைத்த பெயர்களும் பிறவற்றைப்போலவே பெருமை யுற்றன. ஆரியர் அமைத்த ஆண்டமைப்பிற்குச் ''சௌரமானம்'' என்றும், அவர்கள் அமைத்த மாதங்களுக்குச் ''சௌரமான மாதங்கள்'' என்றும் பெயர் வைத்துக் கொண்டனர். ''சௌரம்'' என்பது கதிரவனைக் குறிக்கும் வட சொல். கதிரவனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அக் கால அளவைக் கணிக்கப் பெற்ற தாகலின் அஃது அப் பெயர் பெற்றது.

ஓர் ஓரையில் புகுந்த கதிரவன் பிறிதோர் ஓரைக்குப் போகும் வரையில் உள்ள காலம் ஓர் இராசி அல்லது ஒரு மாதம் எனப் பகுத்தனர். இக் கணக்கீடு பண்டைத் தமிழருடையதே! ஆரியர் இடம் மாறிகளாக இருந்தமையான் அவர்களுக்கு நிலையான வானிய லறிவு குறைவாக இருந்தது. தமிழரின் இவ் வானியல் அடிப்படையில் அவர் திரித்த வட மொழிப் பெயர்களே பிற்காலத்து நிலை பெற்றுப் போனமையாலும்,பண்டைத் தமிழரின் மூல நூற்கள் யாவும் அழிந்தும்,

அழிக்கவும் பட்டமையாலும் அவர் வழக்கே நிலைத்தது குறித்து, தமிழர்க்கு வானிய லறிவே குறைவென மொழிவர் மதிக் குறைவினர் சிலர். அவர் தருக்குறைகள் கதிர்முன் பனி போல் உருக் குலைந்து போங்காலம் மிகத் தொலைவில் இல்லை யென உணர்க.

இனி, ஒவ்வோர் ஓரைப் பெயராலும் அழைக்கப் பெற்ற மாதப் பெயர்கள் சைத்திரம், வைசாகம், ஆஹரம் (ஆனி), ஆஷாடம் (ஆடி) முதலியன. இவ் வழக்கு, தமிழரின் ஓரைப் பெயர் வழக்கை அடி யொட்டின. (விரிவைக் கணிய நூலிற் கண்டு கொள்க.)

இனி, தலைமை மீனின் பெயரே அந்த மீன் சார்ந்த கூட்டத்திற்கும் வழங்கப் பெற்றது. வெள்ளாடு போல் அமைந்த மீன் கூட்டத்திற்கு மேஷம் என்றும், ஆணும் பெண்ணும் இணைந்த இரட்டைத்(மிதுனம்)தோற்றம் போல் உள்ளதற்கு மிதுனம் என்றும், நண்டு, மடங்கல் (சிங்கம்), கன்னி, துலை (தராசு), நளி (தேள்), சிலை (வில்), சுறவம் (முதலை), கும்பம் (குடம்), மீன் ஆகியன போல் அமைந்தவற்றிற்கு, முறையே கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம் (தேள்), தனுசு (வில்), மகரம் (முதலை), கும்பம், மீனம் என்றும் வழங்கினர். இவ் வழக்கில் கடகம், கன்னி, துலாம், கும்பம், மீனம் என்பன தூய தனித் தமிழ்ச் சொற்கள். இவ்வாரிய வழக்கு தலையெடுத்தபின் ஓரைப் பெயரால் மாதங்களைக் குறிக்கும் தமிழ் வழக்கு தலை மறைக்கப் பெற்றது.

இனி, சித்திரை, வைகாசி என்று தொடரும் வட நூல் வழக்கிற்கான, தூய தமிழ்ப் பெயர் வழக்கு மேழம், விடை, இரட்டை அல்லது ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் என்பன.

எனவே சுறவத் திங்கள் இக்கால் ஆரிய வழக்குப் பெயரான தை மாதத்தைக் குறிக்கும் தூய தனித் தமிழ்ச் சொல்லும் வழக்குமெனக் கொள்க.

மாணிழை: பெருமைக் குரிய அணி. இழைக்கப் பெறுவதால் அணி இழையெனப் பட்டது. இழைத்தல்-ஆராய்தல், கலப்பித்தல். சீவல், பொடியாக்குதல், செதுக்குதல், செய்தல், அழுத்துதல், மணி பதித்தல் ஆய பொன்செய் வினைகள் அத்தனையும் குறிக்குமோர் அருஞ்சொல். இத்தனை வினைப்பாடுகளும் கொள்ளலால் பொன்னுல் செய்யப் பெறும் அணிக்கு இழையென்று பெயர் வந்தது. இழை அணிவோரை யன்றி அதனைச் செய்வோரை வளையோர் என்று குறிக்காமை போல.

இனி, செய்யப் பெறும் அல்லது அணியப் பெறும் அணிகளுள் தாலி ஒன்றே மங்கலச் சிறப்பு வாய்ந்த தாகலின் அது மாணிழை எனப் பெறும் தகுதி வாய்ந்தது. மணக்கப் பெற்ற காலத்து அணியப் பெற்ற தாகலின் மணந்த மாணிழை எனப் பெற்றது.

அணந்த சுறவமுன் அகறல் ஆகின்றே: நெருங்கி வரும் சுறவத் திங்களுக்கு முன் அகலுதல் ஆகிற்று.

அணத்தல் —நெருங்குதல்—மேலாகி நிற்றல் (அண்—என்னும் சொன் மூல அடியாகப் பிறந்த சொல்-வேர்—அள். (அண்-அண்ணு—அண்டு-அண்டை—அடு-அண்-அணே போன்றவற்றை ஓர்க.)

அகறல்: அகலுதல்—நீங்குதல். அகலம் என்னும் சொல் பரப்பைக் குறித்த பின், இரண்டு பொருள் அகலு மிடத்துப் பிரிவு தோன்றலால் அகலுதல் என்னும் சொற்கு நீங்குதல், விலகுதல் என்னும் பிரிவுப் பொருள் தோன்றிற் றென்க.

ஆகின்றது—ஆகிற்று என்பதன் மெலித்தல். வேறுபாடு—வேறுபடல்—விகாரித்தல் (வ. சொ.).

புணர்ந்த தோள்: புணரப் பெற்ற தோள்—தழுவப் பெற்ற தோள்.

பொலிவு: இளமை ஒளி. பொன்—பொல்—பொலம்—பொலிவு. மணவாத இளமையோர்க்கு உடலின்கண் உள்ள பொன் போன்றதொரு மினுமினுப்பு. மணஞ் செய்து கொண்டார்க்கு இவ்வொளி மழுங்கித் தோன்றுமாம். திருமணம் செய்விக்கப் பெற்றும் இவ் விளையோளின் பொலிவு குன்றாதிருப்பதை எடுத்துக் காட்டி, இவள் இல்லற இன்பத்தை நிறைவுறத் துய்த்தோள் அல்லள் எனக் குறிப்பிக்கக் கூறப் பெற்றது.

நிணந்த மார்பு: புடைத்து விம்மலுற்ற மார்பகம். நிணம்-கொழுப்பு-மதர்ப்பு. நிரைத்தல் கட்டப் படுதலுமாம்.

நிமிர்பு: நிலை நிற்கும் தன்மை. அழிகிலை: அழிதல் இல்லை. பெண்டிற்குத் தோளும் மார்புமே இளமைக்கும் முதுமைக்கும் வேறுபாடு தோற்றுவிக்கும் கருவிகளாக விருக்கின்றமையின், இளமை யழியா இளையோள் என்று காட்டுவான் வேண்டி அவ் வுறுப்புகளின் நலனழியாமை கூறப் பெற்றது.

மன்றற் கூரையும் மடி கலைந் திலையே: மணத்திற்காக உடுத்தப் பெற்ற புதுச் சீரை, மணத்தின் பின் மீண்டும் மடிக்கப் பெற்று, மங்கலப் பொருளாகப் பேணிக் காக்கப் பெறுமாகலின், அது மடிக்கப் பெற்ற நிலையிலேயே உள்ளதென்றும், பிறிதொருகால் உடுத்தப் பெறும் வாய்ப்பையும் பெறவில்லை என்றும் குறிக்கலாயிற்று. இனி அதனை என்றும் உடுத்

தக் கூடாத தன்மையில் மங்கலம் இழந்தாள் என்று இரக்கந் தோன்றக் கூறியதுமாம்.

**கலியெழு கிளைமுன் கவிழ்ந்த புன்றலை:** ஆரவாரத்தை எழுப்புகின்ற கிளைஞர் முன் நாணத்தால் கவிழ்ந்த தலை. மண நாட் பொழுதில் நாணத்தால் கவிழப் பெற்ற தலை, ஈண்டுத் துயரால் கவிழப் பெற்றது குறிக்கப் பெற்றது. புனையப் பெற்ற தலையாக இல்லாமல் புனைவில்லா வெறுந் தலையாக இருத்தலை ஈண்டுக் குறித்திடப் புன்றலை எனப் பெற்றது. புன்றலை—புல்லிய தலை புல்லிது—புன்மையானது—இழிந்தது-எளிமை தோற்றும் இழி சொல். புல் போலும் எளிமையும் இழிவுமாம். தலை புனைவில்லாமை-நெய் யில்லாது வறளலும், வாராது பரத்தலும், மலரில்லாது எழில் பெருமையும் ஆம்.

**இன்னும் ஏர்ந்தன் றிலையே:** அன்று கவிழ்ந்த தலை இன்று வரை நிமிர்த்தப் பெற்றது இல்லையே! ஏர்தல்-எழுதல். ஏ—எழுச்சியைக் குறிக்கும் ஒரு முதனிலை. மேல் நோக்கி நின்ற எல்லாப் பொருள் குறித்த சொற்களுக்கும் ஏ சொல் முதலாக நிற்பதை உன்னுக. (எ-டு) ஏர்-ஏண்-ஏணி-ஏறு-ஏற்றம்-ஏக்கழுத்தம்-ஏந்தல்—ஏமாப்பு-ஏவல் (மேற் செலுத்துதல்)-ஏவுதல்—ஏனுதி (சேனைத் தலைவன்)-ஏ-எ, எட்டம்—எட்டுதல் (உயர்ச்சிக்குத் தாவுதல்); ஏ—சே-சேண்-சேய்மை-செலவு (மேற் செல்லுதல்)-சேடு (உயர்ச்சி, பெருமை)-சேட்டன் (மூத்தவன், தனக்கு மேலானவன், முதல்வன்)-சேட்டி (மூத்தவள், தமக்கை) [தோழியைக் குறிக்கும் ''சேடி'' என்ற வழக்குச் சொல் முதுமைப் பொருள் குறித்த தூய தனித் தமிழ்ச் சொல்லே. தலைவிக்குத் தோழியாக இருப்பவள் மூத்தாளாக இருந்து வழி காட்டுதல் பண்டைய வழக்கம் ](இதன் விரிவைப் பாவாணரின் முதல் தாய்மொழியில் காண்க.)

**எழுதிய கால்வரிக் கோலமுங் கலைந் தன்றிலையே:** திரு மண நாளில் அழகுக்காக இவள் காலின்கண் செம்பஞ்சுக் குழையாலும், பவளக் குறிஞ்சிச் சாற்றாலும் எழுதப் பெற்ற கோலமும் இன்னும் அழிந்த பாடில்லை என்பது. பவளக் குறிஞ்சி-மருதோன்றி மணம் செய்விக்கப் பெற்று இன்னும் நெடு நாளாகி விடவில்லை என்ற குறிப்புத் தோன்றக் கூறியது. கோலுதல்-கோலம். கோலுதல்-வரைதல்-எழுதுதல்-சூழச் செய்தல்-வளைதல் முதலிய பொருள்களைக் குறிக்கும்.

**வாணுதல் வெளிற:** வாள்+நுதல் என்று பிரிபடும். வாள் நுதல் ஒளி பொருந்திய நெற்றி. வாள்-வளைந்த என்றும் பொருள் பட்டு வளைந்த நெற்றி என்றும் கொளப் பெறும். சுடரொளி என்று முன்னரே அடை பெற்றமையான் வளைந்த என்று கொள்வதே சிறப்பாம். துயர் மேலீட்டால் நெற்றி வெளிறிப் போதலால் 'வெளிற' எனப்பட்டது.

**பொதி குழல் படர்ந்து நிலம் புரள:** அடர்ந்த குழல் என்றும், முன்னர் பொதிந்து வைக்கப் பெற்ற குழல் என்றும் பொருள் படும். பொதிதல்-மிடைதல்-பிணித்தல்-உள்ளடக்குதல். முன்னர் பொதியப் பெற்ற குழல் இக்கால் தளையவிழ்ந்து படர்ந்து நிலம் புரண்டு கிடத்தல் என்பது. குழல் நிலம் புரளுதலால் இவள் தரையில் படுத்துக் கிடந்தனள் என்றபடி.

**இடை நுடங்குதல்:** இடை துவளுதல். துயர் மீக்கூர்தலால் செயலற்றுப் போதல்.

**புறம் அஞ்சி உள்ளழுங்கும்:** புறத்தே உள்ளோர்க்கு அஞ்சி உள்ளத்திற்குள்ளேயே குமைதல். சில நாட்களே கணவனொடு வாழப் பெற்றும், அவனை மறத்தற் கியலா துயரம் பெற்றது பிறர் எள்ளற் குரிய தாகலின், அவர்தம் எள்ளலுக்கு அஞ்சுதலால் உள்ளத்தே வருந்தினுள் என்பதுமாம்.

புனல் வார் கண்: நீர் வழிந்த கண்.

கையறுதல்: செயலற்றுப் போதல்.

கழைமென் தோளி: இள மூங்கிலை ஒத்த மென்மையான தோள்களை உடையவள்.

உறுநாள்: இனி வருதலுற்ற நாள். எதிர் உறும் நாள்.

மறு மணம்: மீட்டும் ஒரு மணம். புணர்த்தீம்-புணர்த்து வீர்-செய்வீர் என்றபடி.

மனை வாழ்வோர்: மனைக்கண் வாழ்தலை மேற்கொண்டு விளங்குவோர்.

நீவிர் எல்லாரும் மனைக்கண் வாழ்தலை மேற்கண்டொழுக, இவ் விளையாள் மட்டும் நும்மொடு இருந்து கொண்டே வாழாமை மேற்கொண்டு கைம்மை நோற்றல் பொருந்தாது என்றபடி.

கழி இளமைப் பருவத்தே கணவனை இழந்தாள் ஆகையால் இவள் மண மின்றி, இல்லற இன்ப நுகர்ச்சி துறந்து வாழல் பொருந்தாது என்று கூறி; இவளுக்கு மேலும் மணம் செய்வித்தல் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியதாம் இது. கணவனை இழந்தார் இளம் பருவத்தினரேனும் கைம்மை நோற்றல் வேண்டும் என்ற ஆரிய வழக்கை அழித்துக் கூறியதாம் இக் கூற்று. இவள் இங்ஙனமே மணமின்றி வாழுதல் இயற்கைக்கும், உடலியலுக்கும் மாறுபட்டதாம் என்று வலியுறுத்தியதாகும் இப் பாடல்.

இது பொதுவியல் என் திணையும், முதுபாலை என் துறையுமாம்.

## பதினான்காம் பாட்டு

விரைவா கின்றே உலகம்! உலகத்துப்
புரையா கின்றே பொலிவுறு வாழ்வே!
மண்ணா கின்றே மனனே! மாண்பொடு
பொன்னா கின்றே பொய்யுடைப் போக்கே!
வறிதா கின்றே அறிவே! வாணாட்
குறியதர் தப்பின்று குடும்பெனும் பயனே!
முதியோர் முதுமை முகிழ்விறந் தன்றே!
இளையோர் இளமை எழில்குலைந் தன்றே!
பெண்டிர் பெண்மை பெட்பிறந் தன்றே!
ஆடவர் ஆண்மை அறக்குலைந் தன்றே!
அறங்கூ னின்று! பொருளர சாணையின்
மறந்தலை நிமிர்ந்தன்று; மானிழிந் தன்றே!
மணஞ்செய் கோலத்து மாண்பிழந் தன்றே!
கணவர் மனைவியர் கட்டவிழ்ந் தன்றே!
அறிவியல் உடலிய லடியிழிந் தன்றே!
பொறியியல் மக்களின் பொறியரிந் தன்றே!
கான்படு விலங்கின் ஊன்வளர் முனைவே!
மாண்பெறு மாந்தர்க்கு முயல்வா கின்றெனத்
தேரா வாழ்க்கை திறம்பலின்
ஆரா விருள்சேர் அழிநிலை நோக்கியே!

## பொழிப்பு:

சுழற்சி நிரம்பிய இம் மண்ணகத்துப் பொலிவு நிரம்பி யிருந்த வாழ்வு உள்ளீடு குன்றித் திண்மை குன்றுவதாயிற்று; நிலைத்திருக்க வேண்டுவதாகிய உள்ளம் மண் போலும் குலை வுறலானது; பொக்கென வெறுமை நிரம்பிய பொய்ம்மைப் போக்கே பெருமை பெறுவதாகிப் பொன் போலும் மதிக்கத் தக்கதானது; அறிவு பயனற்றுப் போதலால் வறட்சியுற்றது. வாழ்நாளின் இலக்கை எய்தும் வழி தப்பியது, கூடி வாழும் பெரும் பயன்! முதுமை நிரம்பியவரின் மூப்பு அறிவு மலர்ச்சி யற்றதாய்ப் போனது; இளையோரின் இளமை அழகு குலைவ தாயிற்று; பெண்டிரின் பெண்மை வேட்கத் தக்க நிலையினின்று அழிந்தது; ஆடவரின் ஆளுமை நிலை முற்றும் குலைந்துபோனது; அறம் கூனலுற்றது; பொருள் அரசு செய்து ஆணை புரிதலால் மறம் தலை நிமிர்ந்தது; மானம் தன் நிலையினின்று இழிந்தது; ஆணும் பெண்ணும் கூடித் தலைப்பெய்தும் மணவமைப்பின் கண் பெருமை இலவாகியது; கணவனும் மனைவியுமாகப் பொருந்தியவர்தம் பிணைப்பு தளர்வுற லாயிற்று; பூதவியல், வேதியியல் முதலிய அறியப் பெற்ற சிதைவிலா உண்மைகள் யாவும், சிதைவுறும் மாந்த உடலின் காலடி நின்று இழித லாயின; மாந்தன் தானே சமைத்துக் கொண்ட பொறி வினைப் பாடுகள் யாவும் இவன்றன் உடலிலுள்ள பொறி புலன்களை அரிந்தெடுத்து விலக்கலாயின. காட்டின்கண் தோன்றி மறையும் விலங்கினங்கள் தம் ஊன் பொதி உடம்பு களை வளர்த்துக் கொள்ளவே முனைந்து முயல்வன போல், மாட்சிமை பெறும் மாந்தரின் மீமிசை வாழ்வும் அவ் வூன் முயற்சி ஒன்றே கொண்டு இயங்குதலாயிற்று;-என்றிவ்வாறு தேர்ந்து கொள்ளப் பெருத வாழ்க்கை மாறுபடுத லுறின்,

விலக்க முடியா இருள் பொருந்திய அழிவு நிலை நோக்கி விரைதல் ஆகின்றது இவ் வுலகம்.

## விரிப்பு :

இப் பாடல் புறத் துறையைச் சார்ந்த தாகும்.

இவ் வுலகத்துக்கண் அறம் மயங்கி மற மோங்கி, பொருள் புரைந்து இருள் நிறைந்து, இன்பிழிந்து துன்பெழுந்து, மாந்தர் வாழ்வுற லின்றித் தாழ்வுறக் கிடக்குங் கீழ்நிலை நோக்கி, உலகியல் பொருண்முடிபு உணரக் கூறியதாகும் இப் பாட்டு.

'புரையாகின்றே பொலிவுறு வாழ்வு' என்ற விடத்து. வாழ்க்கை பொலிவு மிக்கது என உறுத்துக் கூறியும், 'குறியதர் தப்பின்று குடும்பெனும் பயனே' என்ற விடத்து 'வாழ்க்கைக் குறி தப்பிப் போகும் இவ் வுயிர்க் குழாம் மீளுமிடத்து நலம் பயக்குற விளங்கும்' என்று எடுத்துக் கூறியும், கான்படு விலங்கின் ஊன் வளர் முனேவே, மாண்பெறு மாந்தர்க்கு முயல்வாகின்று' என்றவிடத்து, 'நாடுபடு மாந்தரின் மீமிசைப் பேறு காடுபடு விலங்கின் ஊன் வாழ்விற் கிழிந்த முயல்வினின்று, மீட்கப் பெறின் மாட்சிமைப் பட்டு விளங்கலுறும்' என்று நிறுத்துக் கூறியும், இன்னும் பிறவழியும் உலக முய்யக் கூறியதாகும் இப் பாட்டு.

விரைவு ஆகின்று உலகம்: உலகம் விரைந்து செல்லுதலை உடையது. இவ் வடியொடு பாட்டின் இறுதி யடியாகிய 'ஆரா விருள்சேர் அழிநிலை நோக்கியே' என்ற அடியினைக் கொண்டு கூட்டிப் பொருள் முடிக்க. உலகம் அழிவு நிலை நோக்கி விரைந்து செல்கின்றது. ஈண்டு 'உலகம்' ஆகு பெய

ராக உலகத்துள்ள எண்ணுயிரங் கோடி உயிர்களையும், அவற்றுள் மேம்பட்டு நிற்கும் மக்களையும், அவர் தம் பெருநிலை வாழ்வையும் குறித்தது என்க. 'ஏ' அசை. உறுதிப் பொருளில் வந்தது.

உலகத்துப் புரையாகின்று பொலிவுறு வாழ்வு: புரையாகின்றமை நோக்கி உலக வாழ்வு முன்பு திண்மை மிக்கதாக விருந்தமை உணரப் பெற்றது. புரைதல்-உள்ளீடு குறைந்து பொள்ளென்றுதல். பொள்ளுதல்-தொளை யுடையதா யிருத்தல். புள்-பொள் + து-பொத்து-பொந்து = தொளை.

புள் – புளை-புழை–புரை = உள்ளீடறுதல்.

பொலிவுறு வாழ்வு என்று கருத்துப் பொருளைக் காட்சிப் பொருளாக்கியது, தோற்றமே வேண்டாத தொன்றுகலின் அதனுள் துலங்குதலும் அறவே வேண்டாத தொன்றும் என வலியுறுத்துவான் வேண்டி, என்னை? தோற்றத்திற்கும் பயனுக்கும் வேறுபாடில்லையோ எனின், உண்டு; அவ்வகை வேறுபாடுற்ற பொருள் எட்டி போல் துய்ப்பதற்காகா தென்க. இனி, பலாப் போல் துய்ப்புப் பொருள்களிலும் வேறுபாடு தோன்றுவதென்னை எனின், அஃதொன்றே அத் துய்ப்புப் பொருளுக்கு அரணுக நின்றது கண்டு கொள்க.அஃது எட்டித் தோற்றம் போல் வேட்பித்து ஊறுபடுத்தாது, வேட்பியாது நலம் பயப்பதாகியதை உய்த்துணர்க. இனி, வேட்பியாத தோற்றம் நலம் பயக்குமாறு போல் காட்சியளவானே பொலிவு குன்றிய உலகு நலம் பயவாது போவதேன் எனின், பொலிவு என்பது மருள் நீங்கிய மாசறு காட்சிக் குரியதாகலின், அத்தகையோர்க்குத் தோன்றுவதே அன்றி, இருள் தேங்கிய இழிவுறு காட்சியோர்க்குத் தோன்றுவதே ஈண்டுக் குறிக்கப் பெற்றதாம் என்க. இருண்ட அகக்கண் பெற்றோர்க்

குத் தோன்றும் பொலிவும், ஒள்ளியார்க்குத் தோன்றும் பொலிவும் வேறு வேரும் என்க. ஈண்டுப் புறத்தே பொலிவு நிரம்பியதாக இருளோரும், மருளோரும் காண்பதாகிய இவ் வுலக வாழ்க்கை, அகத்தே புரை யோட்டம் உளவாக அருளோரும், தெருளோரும் காண்பதற் குரியதாக உள்ளது என்பது வலியுறுத்தப் பெற்றது.

**மண்ணுகின்றே மனனே!:** நிலே குலேயாத மனம், நிலே குலேயும் மண்போலும் ஆகியது. மனம்-மன் என்னும் அடி நிலே கொண்டது. மன்-நிலேத்தல். நிலேத்தல் உடையதாகலின் 'மனம்' என்னும் பெயர் பெற்றது. என்னே? நிலேயா வொன்றை நிலேத்தல் என்றது ஏன் எனில், அது நிலேயா நிற்றல் கொண்டே நிலேயாமை வாய்ந்தது எனக் கருதல் வேண்டா வென்பது குறித்தும், முயற்சியின் நிலேக்கும் திறன் வாய்ந்த தாகும் என்பது குறித்தும், உறுதிப் பொருளும், பண்பும் தோன்ற மனம் என்றனர் முந்து நூல் கண்ட முதுவோர். மெய்யறு தோற்றத்தை மெய் என்ருற் போலவோ எனில் அற்றன்று. உயிர் இவ்விடத்தே உறையுள் கொண்டது மெய்யே எனத் தேற்றலான் உடலே மெய் என்றனர். என்னே? காண்பொருளாகிய உடலின் வெளிப்பாடு கொண்டே காணுப் பொருளாகிய உயிரின் உண்மை உணரப் படுதலின் மெய் என்றனர். தூசறு உணர்வால் துலங்கத் தோற்றிய மாசறு காட்சியின் மதிமன நுண்ணியர். இனி, நிலேக்குரிய தன்றிதன் தன்மை; நிலேக் குரியதே என வலியுறுத்துவான் வேண்டி இப் பொருளின் மெய்த் தன்மை புலப்படுத்த மனம் என்றனர். மெய்–தனிப் பொருளன்று. உயிரொடும் பிற வொடும் கலந்த பல்பொருள் ஒருரு; பன்மூல வெளிப்பர்டு. எனவே கோ ஏறும் கழுதை கோவேறு கழுதை எனப் பெயர் பெற்ருற் போல், உயிர் இருப்பதை மெய்ப்பிக்கும் உடலே மெய் யெனப் போற்றியும் தேற்றியும் கூறினர் என்க.

இனி மனம் நிலைப்பாடுற வளர்தலே அதன் மீமிசை நிலையாதலின் அது நிலை குலைதல் தாழ்வான மாந்த நிலையாம் எனக் கண்டு கொள்க. மனம் மக்களிடை யன்றிப் பிற வுயிர்களிடத்தும் மங்கித் தோன்றுத லுண்மையின், மக்கள்பால் புலரத் தோன்றிய நிலையினின்று வளர்ச்சி யுறுதலே மாந்தத் தோற்றத்தின் சிறப்பாம் என்க. இவ் வழிச் சிறப்பெய்த வேண்டிய மனம் மண்போல் நிலை குலைதலுற்றது என்க. மண் உலகத் தோற்றத்தின் முதல்; நாற் பூதங்கள் நிரம்பிய ஐந்தாவது பூதப் பொருள். அத்தகையதோர் ஐம் பூதப் பொருளாகிய உடலில் மனம் என்னும் நிலைப்புப் பொருள் நிலைத்திருக்க வில்லையானால், இம் மண்ணிற்கும் உடலிற்கும் வேறுபாடுதான் என்னையோ என்று உன்னுக.

மாண்பொடு பொன்னாகின்றே பொய்யுடைப் போக்கே!: பொய்யுடைப் போக்கு மாண்புடையதாகவும், பொன் போல் மதிக்கப் பெறுவதாகவும் உளது. பொய்-பொள் (வெறுமை-உள்ளீடற்றது) என்னும் வேரடியாகப் பிறந்த சொல். பொன்-பொலம் மிக்கது. 'பொல்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல்லென்பதும், பயனும் முன்னரே குறிக்கப் பட்டன. மனம் நிலை குலைந்த பின் பொய் மாண்பென மதிக்கப் பெற்றது என்க.

•

வறிதாகின்றே அறிவே: மனம் நிலை குலைந்து, பொக்கு நிலை மதிக்கப் பெற்ற பின் அறிவு வறிதாக மதிக்கப் பெறுகின்றது என்க. வறிது-வறள்-விளைவு இல்லது. வள்-வறு-வறுமை-வறட்சி-வறண்டது. வள்-வெள்-வெறு-வெறுமை. அறிவின் விளைவு ஒன்றுமில்லை என்க. விளைவு-பயன். அறிவு நிலம் போல்வதாயின் அதனைப் பயன் கொளுவா வழி வறண்டு கிடத்தலால் வறிது நிலை எனப்பட்டது.

**வாணுட்குறி அதர் தப்பின்று குடும்பெனும் பயன்:** குடும்பு நிலையால் எய்தப் பெறும் பயன் வாழ்நாளின் பெரு நோக்கினை அடையப் பெறுதல். அவ் வழி தவறிற் றென்க. அதர்–வழி.

**குடும்பு:** கூடி யுறைதல் நிலை. குடும்பு–குடும்பம். குல்-குடு-கூடு; குல்–குலு-குலவு-குழு-குழும்பு. குல்-கல்-கல-கலாவுதல்-கலத்தல். உயிர்கள் கூடி யுறைதலால் ஏற்படும் பெரும் பயன், வாழ்வின் வழி தப்பலால் இலதாகின்றது. அதர் தப்பவே பயனும் தப்பிற் றென்க.

**முதியோர் முதுமை முகிழ்விறந் தன்று:** முதுமை-முற்றிய நிலை. முதுமை உடல் வழித் தெனினும், அறிவும், மனமும் அதன்வழி முதிர்வுற்று முகிழ்ச்சி யடைதல் இயல்பாயிற் றென்க. ஆயின் இக்கால் மனமும், அறிவும் முகிழ்வின்றி உடல் மட்டும் முதுமை யற்றது இழி நிலை என்க. முகிழ்விறந் தது-மலர்ச்சி யுற்றது.

**இளையோர் இளமை எழில் குலைந்தன்று:** இளமை எழில் குலுங்குவதாய ஒரு பருவம். எழில் குலைதலால் இளமை சாம் பிற் றென்க. முதுமை மலர்ச்சி யறுதலால் அதன் வழிப்பட்ட இளமையும் எழில் குலைந்த தென்க. வித்து விளைவின்றி, செடி பொலிவுறு தாகலின், முதுமை முகிழ்ச்சியற, இளமையும் குலைவுற்ற தென்க.

**பெண்டிர் பெண்மை பெட்பிறந்தன்றே:** பெட்பு-வேட் கப் படுவதாந் தன்மை. இத் தன்மை அறுதலின் பெண்மை யும் அற்ற தென்க. பெண்மை அறின் உலகம் மறவழிப் படு மென்க.

ஆடவர் ஆண்மை அறக்குலைந் தன்று: ஆண்மை-ஆளு தல் தன்மை. ஆண்மை குறைவுற்றதென்க. ஆண்மையும் பெண்மையும் நிறைவுற விளங்காமற் போமாயின் உலகு மற வுணர்வால் அழிக்கப் பெறுமென்க.

அறம் கூனின்று: அறம் கூனுத லுற்றது. கூன்—வளைவு. குல்-குன்-கூன். குல்லென் வேரடியில் நூற்றுக் கணக்கான சொற்கள் வளைதற் பொருளில் தோன்றி யிருப்பதை மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணரின் ''தமிழ் வரலாறு'' என் னும் நூலிற் கண்டு கொள்க.

பொருளரசாணையின் மறந்தலை நிமிர்ந்தன்று: பொருள் அரசு கொண்டு ஆணை (அதிகாரம்) செலுத்துதலின் மறம தலை தூக்கிற்று என்க. நிமிர்தல்-ஏக்கழுத்தம் பெறல்.

மான் இழிந் தன்று: மானம் இழிநிலை யுற்றது. ஆண்மை குலைந்து, அறங் கூனி, பொருள் அரசோச்சி, மறம் தலை நிமிரவே மானமும் இழிந்து போனதென்க.

மணஞ் செய் கோலத்து மாண்பிழந் தன்றே: மணம்-இணையப் பெறும் தன்மை. மணத்தல்-இணைதல்-சேர்தல். மள் என்ற வேரடியாகப் பிறந்த சொல். மள்—மண்-சேர்ந்தது. மண் துகள் ஒன்றோடொன்று சேர்தலின் மண் எனப் பெயர் பெற்றது. சேராத மண் துகள்கள் உடையது மணல். மண் + அல் = மணல். மள் + து = மண்டு; மண்டுதல்-சேர்தல், நிறைதல். ஆண் பெண் சேர்தலின் 'மணம்' என்றாயிற்று. இம் மண நிகழ்ச்சியில் இக்கால் பெருமை இலதென்க. ஆணும் பெண்ணும் இணைதல் உடலுறு புணர்ச்சியின் அடியில் மட்டு மன்றி உளமுறு புணர்ச்சியிலும் அடியொற்றியதாகலின், புள்ளினும் விலங்கினும் நடைபெறும் சேர்க்கையை விட மாந்

தச் சேர்க்கை பெருமை பெறுவதாயிற்று. ஈண்டோ, இந் நிலை மனப் புணர்வின் வழியின்றி நேர்வதால் மாண்பிறந்த செயலாயிற்றென்க.

**கணவன் மனைவியர் கட்டவிழ்ந் தன்றே:** மனம் பிணிக் காத மண மாகலின் கணவன் மனைவியர் கட்டு அவிழ்கின்ற நிலையாயிற் றென்க. கட்டுதல்-மணத்தல். மணத்திற்கு அடையாளப் பொருளாகிய தாலியையும் குறிக்குமென்று கொள்க. வெறும் உடலால் பிணிக்கப் பெற்ற கட்டு உடற் சூடு தணிந்த பின் அவிழ்தல் போல் மனக் கட்டு அவிழா தென்க. இக்கால் நடைபெறும் மணக் கட்டு மனக் கட்டன்றாக நிணக் கட்டாக லின் அஃது அவிழப் பெறுதல் இயல்பாயிற்று. நிணம்—கொழுப்பு-தசை-அரத்தம் இவற்றால் அமைந்த உடல்.

**அறிவியல் உடலியல் அடி இழிந் தன்றே:** அறிவியல்-பூதவியல், வேதியியல் முதலாய அடிப்படை நின்ற உண்மை யியல். இவ் வறிவுகளான் தெளிந்து தேரப் பெற்ற உண்மை களும், அவை கொண்டு நிறுவிய பல்லாயிரக் கணக்கான ஆக் கங்களும் மாந்தரின் வெறுமை நலத் துய்ப்புக்கே பயன்படுத் தப் பெற்று மேனோக்கம் இன்றிக் கீழ்மை யுற்ற தென்க. என்னை? ஒளிக்கும் ஒலிக்கும் அடியாய மின்னும், அனற்கும் புனற்கும் அடியாய விண்ணும் அறிவியலால் வயப்படுத்தப் பெற்று மாந்தரின் உடல் துய்ப்புக்கே உதவுவன அன்றி, உளத் துய்ப்புக்குத் துணை நில்லாமை ஊன்றி உணர்க.

**பொறியியல் மக்களின் பொறியரிந் தன்றே:** கருவி யறிவும், புதுப் புனைவுகளும் மக்களின் ஐம்புல வுணர்வுகளையும் குன்றச் செய்து, ஐம்பொறிகளையும் செயலறும்படிச் செய் தனவே யன்றி, மற்று அவற்றின் வளர்ச்சிக்குப் பயன்படாமை ஊர்திகள், ஆடிகள் முதலாய காட்டுப் பொருள்களால் நாட் டிக் கொள்க.

**கான்படு விலங்கின்...–நோக்கியே:** கான்படு விலங்கு என்று அடை தந்து பிரித்தது, மனைபடு விலங்குகளாய நாய், பூனை, குதிரை, மாடு முதலாய விலங்குகள் வாழ்வு பயன்படுதலும், கான்படுவனவாய அரிமா, வரிமா, கரிமா, நரிமா முதலாய விலங்குகளின் வாழ்வு பயன்படாமையும் காட்டுவான் வேண்டி. அவை வாழ்வு பயன்படாமை கருதி, அவற்றின் ஒவ்வொரு முனைவும் அவற்றின் ஊன் வளர்ச்சிக்கான முனைவே என்றறிக. அத்தகைய முனைவே போல் இற்றை மாந்தரின் முயல்வும் எவ்வகை மாட்சியும் பெறாததாகி இழிந்தது என்க.

இவ்வகையாகிய தேர்ந்து கொள்ளப் பெறாத வாழ்க்கைக்கு மாந்தர் முயல்வு மாறுபட்டு வருதல் ஆரா விருள் சேர்ந்த அழிநிலைக்கு வழியாம் என்க. அவ் வழிநிலை நோக்கி இவ் வுலகம் விரைந்து செல்கின்றதாம் என்க!

**தேரா வாழ்க்கை:** தேர்ந்து கொளப் பெறாத வாழ்க்கை. தேரா வாழ்க்கை என்றதால் தேர்ந்த வாழ்க்கை ஒன்றுண்டு என்பதும், அஃது ஒளி நிரம்பியதாக விருக்கும் என்பதும், அஃது ஒன்றே வாழ்நிலைக்கு வழிகாட்டுவதாகும் என்பதும் தெளியப் பெறும்.

**திறம்புதல்:** மாறுபடுதல். தில்-திர்–திரு-திருகு–திரும்பு-திறம்பு-திருகு-மாறுபாடு.

**ஆராவிருள்** -பொருந்திய விருள்-விலக்கலாகா விருள்.

"மாந்த வியல்பாந் தன்மைகள் எல்லாம் முறையே குலைந்தும், வறிதாகியும், சிதைவுற்றும், இறந்தும், இழிந்தும், அழிந்தும் படுதலால், அவை யடியொட்டிய மாந்த வாழ்வின் இயற்கையும் மாறுபட்டதென்க; படவே அதற்கு நிலைக் களனாக உள்ள உலகமும் இருள் நிரம்பிய அழிநிலை நோக்கி விரைந்து செல்வதும் இயல்பேயாம் என்க" என எதிரது கூறி இழிவது தடுத்தலாம் இப் பாடல் என்க.

இது பொதுவியல் என்திணையும், முதுமொழிக் காஞ்சி என் துறையுமாம் என்க.

## பதினைந்தாம் பாட்டு

நெஞ்சு நிலனாக நினைவு வித்தாக
ஐம்புலக் கொழுசார் அறிவு பகடாக
முயல்வுந் துணிவும் இணையே றாக
வைகலு முழுது, கற்புநீர் பாய்ச்சி
ஒழுகுநாண் நட்புரன் ஏம மாக
ஐய,நீ பயந்த வாணாட் டாயத்து
வையம் உய்தல் வேண்டி அயர்வின்றி
மெய்யின் விளைபுகு வுணர்வேம்
செய்பயன் முற்றும் நின்னளி யன்றே!

### பொழிப்பு :

எம் தெஞ்சம் நிலனாகவும், அந் நெஞ்சகத்தே ஊன்றப் பெறும் நினைவே வித்தாகவும், ஐம்புலன்கள் எனும் கொழுக் களால் சாரப் பெற்ற எம் அறிவு ஏராகவும், முயற்சி,துணிவு என்பனவே அவ்வறிவு ஏரின் பிணிக்கப் பெற்ற இணை ஏறுகள் ஆகவும் கொண்டு நாள்தொறும் உழுது, (அவ்வித்து வளரக்) கல்வி என்னும் நீரைப் பாய்ச்சியும், ஒழுக்கம், தாணம்,நட்பு, உரன் என்னும் நாற்புடைக் காப்பிட்டும், தலைவனே, நீ நல்கிய இவ் வாழ்நாள் எனும் உரிமைக் காலத்து, இவ் வையகம் உய்யுமாறு விழைந்து, அயர்விலாது, மெய்ம்மையின் விளைவு செயப் புகுந்த இவ்வுணர்வுடையேம் செயக்காணும் பயன்கள் முழுவதும் நின் அருட் கொடையே!

## விரிப்பு :

இப் பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

தூசகல் நெஞ்சொடு மாசறு காட்சியின் துலங்கத் தோன்றிய மெய்யறிவினர்க்கு, இவ்வுலக இயக்கமாக அமைந்த வாழ்க்கை, வையம் உய்யுமாறு விழைதற்கும், அதன் பொருட்டு அயர்வின்றித் தம் பொறிப் புலன்களால் பயன் விளைத்தற்குமே என்பதை வலியுறுத்திக் கூறுவதாகும் இப் பாட்டு.

இப் பாடலின்கண் மெய்யறிவினர் செய்யும் அறிவு வேளாண்மை நன்கு விளக்கப் பெற்றது. நிலனுழுது பயன் விளைக்கும் உழவோர்க்கும், புலனுழுது பயன் விளைக்கும் புலவோர்க்கும் பொதுவாய வினைகளும் கருவிகளும் அமையக் கூறியது கருதற்பாலது.

நெஞ்சம் நிலமாகவும், அதன்கண் ஊடாடும் நினைவு, அந் நிலத்தின்கண் விதைக்கப் பெறும் விதையாகவும், நெஞ்சத்தை உழும் அறிவு, நிலத்தை உழும் ஏராகவும், அவ் வறிவு முற் செலப் பயன்படும் ஐம்புலன் உணர்வுகளும், ஏருக் கமைந்த ஐந்து கொழு முனைகளாகவும், அறிவாகிய ஏர் உள்ளத்தை உழுதல் செய்யத் துணை செய்யும் முயற்சி, துணிவு இரண்டு இயல்பூக்கங்களும் ஏரை இழுத்துச் செல்லும் இரண்டு காளைகளாகவும், வாழ்வின் ஒவ்வொரு நாளுமே உழ்வு செய்யப் பெறும் பருவமாகவும், கல்வி முயற்சியே பயன் விளையப் பாய்ச்சப் பெறும் நீராகவும், ஒழுக்கம், நாணம், நட்பு, உரன் என்பவையே அந் நெஞ்ச நிலத்து விளையப் போகும் மெய்யறிவுப் பயிர்க்கு நாற்புறமும் காப்பாக

அடைக்கப் பெற்ற வேலிகளாகவும், நமக்குற்ற வாழ்நாள் நாம் வேளாண்மை செய்தற்காக அளிக்கப் பெற்ற உரிமைப் பட்டயமாகவும், வையம் உய்தல் வேண்டி அயர்வின்றி மெய் யாக வேளாண்மை செய்து பயன் காணுவதே நமக்குற்ற கடன் என்றும், அதுவே நம் தலைவனுகிய இறைவன் நமக் கிட்ட கட்டளை என்றும் இப்பாட்டின்கண் உருவக வழி உணர்த்தப் பெற்றுள்ளது.

நெஞ்சம்-உள்ளகம்-உளம்-மணம். நில் என்னும் வேரடி யாகப் பிறந்த சொல். பிறிதொரு பாட்டில் மனம் என்னும் சொல் மன்-நிலைத்தல் என்னும் வேரடியாகப் பிறந்த சொல் என்று காட்டப் பெற்றது. உள்ளம் என்பது உள்-நினை என் னும் பொருளடியாகப் பிறந்த சொல் என்பதும் முன்னர் காட்டப் பெற்றது. ஈண்டு நெஞ்சம் என்பதும் நினைவு என் னும் பொருளை அடிநிலையாகக் கொண்டே தோன்றிய சொல் லாகும்.

நில்-நின்-நினை-நினே-நினைவு.

நின்-நென்-நென்-நென்சு-நெஞ்சு-நெஞ்சம்-'சு' பெயர்ச் சொல் இறுதி.

நினைவுக்கிடனுகிய பொருள் நெஞ்சம். இனி நெஞ்சம், உள்ளம், மனம் என்னும் மூச் சொற்களும் ஒரு பொருள் குறித்த பல சொற்கள். இவை மூன்றும் மூன்று பயன் நோக்கி முச் சொற்களாக வெளிப் பெற்றன. புதிய கருத்துப் புலப் பாடோ, பயனே இன்றிச் சொற்கள் பிறவா.

நமக்கு உள்ளமாக அமையப் பெற்ற அகக் கருவி மூன்று நுண்ணிய இயக்கங்களைக் கொண்டது. வல்லார் உள்ளத்து

அலைகளாக வெளிப்படும் நினைவலைகளைத் தாங்கும் அல்லது வாங்கும் அலை வாங்கி ஆகவும், தன்னிடத்தே எழும்பும் நினைவை அலைகளாக வெளிப்படுத்தும் அலை பரப்பியாகவும், நினைவை வாங்கவோ, வெளிப்படுத்தவோ விழையாவாறு தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் அடக்கியாகவும் மனம் மூவியக்கம் கொண்டது. இனி, இம் மனம் இம் முத்திறத்தும் அறிவுடன் சேர்ந்து உள் வாங்கப் பெற்ற அல்லது வெளியிடப் பெற்ற அல்லது நிலை நிறுத்தப் பெற்ற மன வலைகளின் சூடும் குளிர்ச்சியுமாகிய தன்மைகளைத் துய்க்கும் ஆற்றல் வாய்ந்தது. அறிவுடன் கலந்தாலல்லது மனம் துய்ப்பு உணர்வைப் பெறாது. குழந்தைகளின் உள்ளம் நினைவலைகளை வாங்கவும், வெளிப்படுத்தவும் இயல்வதொன்றாயிருப்பினும் துய்ப்பு உணர்வற்ற நிலையில் இயங்கும். சிற்சிலகால் நாம் மகிழ்வூட்ட மகிழ்தலும், சினமூட்ட அழுங்குதலும் செய்வது யாங்ஙன் எனின், அது கருவிகளின் இயல்பூக்கத்தால் ஏற்படும் உந்து உணர்வு ஆகும் என்க.

இனி மனம் நினைவலைகளை வாங்குமிடத்து நெஞ்சம் என்றும், நினைவலைகளை வெளிப்படுத்துமிடத்து உள்ளம் என்றும், தன்னை நிலைப்படுத்திக் கொள்ளுமிடத்து மனம் என்றும் பெயர் பெறும். மனவலைகள் உள்ளத்தே மோதுறுமிடத்து நினைவு என்றும், மனவலைகள் உள்ளத்தினின்று வெளிப்படுமிடத்து உன்னல், எண்ணல் என்றும், நிலைப்பேறுறுமிடத்துக் கருதல், மன்னுதல் என்றும் பெயர் பெறும்.

இனி, மனமென்னும் அகவுறுப்பு உயிர்த் தொடக்கத்தே நெஞ்சமாக அலர்ந்து, உள்ளமாக மலர்ந்து, மனமாகப் புலரும் தன்மையது. அலர்தல்-மொக்கு, முகையாதல்; மலர்தல்-விரிதல், மலர்ச்சி யுறுதல், புலர்தல்-ஒளி பெறுதல், தெளிதல். இனி, நெஞ்சமாக வெளிப்பாடெய்திய மனம், நினைவு மிகமிக

உள்ளமாக மலர்கிற தென்றும், உள்ளமாக மலர்ந்த பின்னரே நினைவலைகளை வெளிப்படுத்தும் ஆற்றல் பெறுகின்றதென்றும், அவ் வாங்கு ஆற்றலும் போங்கு ஆற்றலும் வலிவுற்ற பின்னர் தான் புற விளக்கம் நிறைவுற்று அக விளக்கம் கால் கொள்ளும் என்றும், அது பின் நிறைவுற நிறைவுறத்தான் மனம் ஒளி பெற்றுத் தெளிவடையும் என்றும் கண்டு கொள்க.

இனி, முதற்கண் நெஞ்சு நினைவை வாங்குந் தன்மையதாக விளங்குமன்றி நினைவை வெளிப்படுத்தும் தன்மையதாக இராது. பெரும்பாலான மாந்தர் வாங்குகின்ற நெஞ்சினரே. அவர்தம் நெஞ்சகத்துப் படிகின்ற நினைவலைகள் அவருடையனவல்ல. நினைவலைகளை எழுப்ப வல்ல உள்ளம் கொண்டார்தம் அழுந்திய உணர்வால் எழுப்பப் பெற்ற அலைகளாகும். இவ்வலைகளைத் தமக்குற்ற எண்ணங்களாகக் கொள்வர் அப் பேதையர். இவ்வாறு பிறர்தம் நினைவலைகளால் மோதுறப் பெற்ற நெஞ்சம் அவ்வலைகளினின்று பெறப்படும் அறிவுணர்வான் பற்றப் பெற்று வளர்ச்சியுற்றுத் தாமே அத்தகைய நினைவலைகளை வெளிப்படுத்தவல்ல ஆற்றலுறுகின்றது. அதுகாறும் நுழைவாயில் ஒன்றே திறக்கப் பெற்ற நெஞ்சத்திற்குப் பின்னர் வெளி வாயிலும் திறக்கப் பெறும். அவ் வினைப்பாடும் நிறைவுற்ற பின் உள்ளம் தன்னைத்தானே உள் நோக்கவல்லது. அக்கால் மனமென்னும் பெயர் பெற்று நிலைப் பேறு பெறும். இது தன்னை அகநோக்கிப் பார்க்குந் திறமுடையதாகலின் அகம் என்னும் சிறப்புப் பெயர் தாங்கப் பெற்றதென்க. இக்கால் மனம் குவிதலுறும். இதுவரை மனவுணர்வோடு அகன்று வளர்ந்த அறிவும் இக்கால் குவிதலுறும். இதனையே அஃகிய அறிவு என்பர் திருவள்ளுவர். அறிவனதும், மனத்தினதும் பிறவாந் தன்மைகளைத் தேவையுற்ற விடத்து மீண்டுங் கூறுவாம்.

ஈண்டு முதற்கண் பிறருடைய நினைவுகளை வாங்கும் தன்மையுடைய தாகலின் நெஞ்சு எனப் பெற்றது. அதுதான் வாங்கும் நினைவே தன்னை வளர்த்துக் கொள்ளப் போகும் உணர்வு மரத்திற்கு வித்தாக அமைதலின் நினைவு வித்து எனப் பெற்றது. வித்து ஊன்றப் பெறுதற்கு அமைந்ததாக லின் இவ்வக வுறுப்பு நிலமென்று கொள்ளப் பெற்றது.

நெஞ்சும், நிலமும் 'நில்' என்ற ஒரேயடியாகப் பிறந்த இரு சொற்கள்.

வித்து-'விள்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். விள்ளுதல்-விளங்குதல்-வெளிப்படுதல்-வெடித்தல்-மலர்தல்-விரிதல்-விளங்குதல்-வேறுபடுதல் முதலிய வினையொழுங்கை நிரல்பட உணர்த்தும் ஓர் அரிய சொல். விள்+து=வித்து. வெளிப்படக் கூடியது; விரிவடையக் கூடியது—விளங்குந் தன்மையது; மலருந் திறத்தது; இதனின்று பிறிதொன்றாய் வேறுபட்டு வேறுபட்டு வளருந் தன்மையது என வரும் பல பொருள்களை உள்ளடக்கிய ஒரு சொல்லும் அச்சொல்லுக் குரிய பயனுமாகும்.

வித்துக்கு மூலம் விள், அதன் மூலம் பிள். பிள்-பிளவுற்றுப் பிரியும் தன்மையது.

பிள்-பிள்ளை (தாயினின்று பிரிவது); பிளவு-ஒன்று இரண்டாதல்.

பிள்-பிண்-பிணம்-உயிர் வேறு மெய் வேறாய்ப் பிரிதல் நிலை-உயிர் பிரிய எஞ்சிய உடல்.

பிள்-விள்-வெள்-ஒள்; பிள்+து-பித்து; விள்+து-வித்து; வெள்+இ-வெளி; ஒள்+இ-ஒளி.

ஒளி வடிவாயும், வெளி விரிவாயும், வித்து நிலையாயும் நிற்கும் புடவியின் மூலக் கரு வித்தும் பித்தும் ஆகும்.

வித்து—வித்தன்-வித்தகன். பித்து-பித்தன்-பிச்சன்-பிஞ்சகன்-பித்தகன் என வெளிப்படும் இறைப் பொருளுணர்த்தும் மூலச் சொற்களை ஓர்க.

இனி, வெளிப்படும் தன்மையுடைய பொருள்கள் யாவும் சூடுறுதல் வேண்டுமாதலின் வித்தென் சொற்கும், பித்தென் சொற்கும் சூட்டுப் பொருள் உண்டு.

வித்து-விந்து-சூடும் ஒளியும் சான்ற மூலப் பொருள்.

பித்து-பித்தம்-சூடு. பித்து-பிச்சு-உடலிற் சூடு எழுப்பும் உள்ளூறுப்பு.

இவ்வுலகத்துத் தோன்றிய நுண்ணியதோர் அணுவிலும் இப் புடவியின்(பிரபஞ்சம்)விளக்கம் இருப்பது அண்டபிண்ட உண்மையாகும். அண்டம் பல நிறைவது அகண்டம். அண்டம் பிளவுற நிற்றல் பிண்டம். அண்டத்தின் மூலம் அணு. இவ்வுண்மைகள் போலவே இவ் வுலகத்தின்கண் தோன்றி விளங்கும் அணுத் திரளையாகிய மாந்தனும், அவனின்று வெளிப்படும் உணர்வுகளும், அவை யுணர்த்தும் ஒலிகளும், அவை யடங்கிய சொற்களும், அவை நிரம்பிய மொழிகளும் இவ் வுலக உண்மைகளைப் பல்வகையானும் பறை சாற்றி நிற்கும் பிண்டப் பொருள்களே ஆகலின், இவை வழியாகவும் இவ்வண்ட உண்மைகள் உணரப் பெறுதல் கூடும் என்று அறிக. இனி, முதுமொழியாம் நம் முத்தமிழ் மொழியோ மாந்தன் கலப்புறு உணர்வினனாகிக் காடுமேடுகளில் சுற்றி யலையும் காட்டுமிராண்டியாக, எவ்வகைத் தன் முயற்சியும்

இன்றி, இப்பேரியற்கையின் உணர்வலைக்குள் ஒடுங்கி நின்ற காலத்தே தோன்றிய மொழியாதலின், இம் மொழி ஒன்றின் கண்ணேயே இவ்வியற்கையின் உண்மைகள் நிரப்பப் பெற்றிருத்தலையும், இஃதன்றிப் பிறவெல்லா மொழிகளும் மாந்தன் தன்னுணர்வு மிகப் பெற்று உணர்வு வெளிப்பாட்டுத் திறம் பெற்ற கலப்புணர்வுக் காலத்தே தோற்றுவிக்கப் பெற்றவாகலின், அவற்றுள் கால நிரலாகவும், கருத்து நிரலாகவும் இயற்கையல்லாப் படைத்துமொழிதலாகிய சொற்கள் நிரப்பப் பெற்றிருத்தலையும் மெய்யறிவினுல் கண்டு கொள்க.

படைத்து மொழிதலாவது, அரிசியைச் சோறாக்கல், மாவாக்கல், கூழாக்கல், அவித்துப் பிட்டாக்கல் போன்ற இயற்கைமேல் மாந்தன் தன்னுணர்வால் அமைத்துக் கொண்ட செயற்கை வினைப்பாடுகள் போல், இயற்கை மூல உணர்வொலிகளைக் கூட்டியும் குறைத்தும், நெளித்தும் சுழித்தும், நலித்தும் படைத்துக் கொண்ட சொற்களும் அவற்றைக் கூட்டுற மொழிதலுமாகும்.

எனவேதாம் நம் மூதுமொழித் தமிழ்ச் சொற்கள் மெய்யறிவு பூட்டப் பெற்ற இயற்கைப் பெட்டகங்களாக உள்ள நிலையைத் தெற்றெனத் தெளிந்து தேர்க.

இனி, பிற வெளிப்பாட்டு நிலைகளினின்று வெளியேறி வரும் வலிந்த நினைவலைகளே நமக்கு வித்தாக அமைந்து நாளடைவில் முளை விட்டு அறிவாக வளருமென்று கொள்க. இனி, அவ்வறிவு பகுத்தறிவாயும், அதன்பின் மெய்யறிவாயும் மலருமென்க. இம் மூவகை யறிவும் வளர்தலுக்குற்ற நிலன் இந் நெஞ்சே என்பது இப் பாட்டின் முதலடியால் விளக்கப் பெற்றது.

ஐம்புலன்: ஐந்து புலன் உணர்வுகள். புல-புலர்-புலரி தல்-புலத்தல்- வெளிப்படுதல் - புலம் - புறம் - புறப்படுதல்-புறத்தே தோன்றுதல்–வெளிப்படுதல். உடலின்கண் பொதியப் பெற்ற ஐம்பூத நிலைகளுக்கும் அடிப்படையாகிய உணர்வுகள் வெளிப்பட்டு நிற்றல். புல்–பொல்–பொள்-பொறி.கதிர் மணிகளை வறுத்துச் சூடேற்றுங்கால் அவை பொரிந்து மலர்தலுக்கும் மூலம் 'பொல்' என்னும் சொல்லே யாகும். புல்-பொல்-பொரி-பொரிதல்–உள்ளீடு வெளிப்படல்.

ஐம்புலன்கள் ஆகிய கொழுமுனைகளைக் கொண்ட அறிவாகிய பகடு–ஏர் என்பதாம். ஈண்டு அறிவு ஏராகவும், அவ்வேர் முனைகளாக ஐம்புலனுணர்வுகளும் உருவகிக்கப் பெற்றன. அறிவு முயற்சி ஏரின் உழுதல் முயற்சியாகக் கொள்ளப் பெற்றது. அறிவெனும் ஒரு கூட்டுணர்வு,புலன்களின் முனைப்புகளினின்றே வெளிப்படுதலும், வளர்ச்சி யுறுதலும் காண்க. புலன்கள் முனையப் பெருதவிடத்து அறிவுணர்வு அவ் வழி மழுக்க முறுதலும் உய்த்துணர்க. புலன் உணர்வின் பற்றுதல தன்மையே அறிவு முனைப்புக்கு வழியாதலின் அறிவுணர்ச்சி புலன் உணர்வின்றி அமையாதாம் என்க. இவ்விடத்துப் புலன்கள் தங்குமிடமாகிய பொறிகளைக் கூருது புலன்களைக் குறிப்பிட்டதென்னை யெனின், பொறிகள் பழுது படுகின்ற விடத்தும் அவ்விடத்துப் புலன் உணர்வு ஊன்றி நிற்குமாகலின் என்க. என்னை? பொறியிலாவிடத்துப் புலன் உணர்வு கூடுமோவெனில், கூடுமென்றும், ஆனல் அவ்வுணர்வு உடலின் மற்றைய பொறிகளின்வழி செயற்பாடு கொள்ளும் என்றும் உணர்க.

இனி, இவ்வறிவென்னும் ஏரைக் கட்டியிழுக்கும் இருவகை முயற்சிகளும் இரண்டு எருதுகளாக உருவகிக்கப் பெற்

றுள்ளன.முயல்வும், துணிவும் இணைந்த இரண்டு எருதுகளாக முன்னின்று அறிவியக்கத்தைச் செய்யும் பான்மையை ஓர்ந்து உணர்க. உடல் முயன்றாலன்றி அறிவு முனையாது; அறிவும் புலன்கள் ஊன்றினாலன்றி இயங்காது என்பது இவ்வடிகளால் உணர்த்தப் பெறும் உண்மை.

இனி, உடல் முயற்சிக்குத் துணை போவது துணிவு என்க. வேட்கையுள்ள அறிவு அங்காந்து நிற்கும். பொறிகளைத் திருப்பிப் புலன்களை ஊன்றுவிக்கும். உடல் முயலும்; முயற்சிக்குத் துணிவு துணை நிற்கும் என்பதாம். துணிவின்றி முயற்சி சிற்சிலகால் தடைப்பட்டுப் போகும். எனவே தான் இரண்டும் ஒருமித்து நடையிட வேண்டி எருதுகளாக உருவகம் பெற்றன.

**வைகலும் உழுது** என்பது ஒவ்வொரு நாளும், நாளுக்குரிய பொழுதும் இடையறாது உழுது என்றபடி. வைகுதல்–ஏகுதல், இருத்தல், எதிர்தல் ஆகிய பொழுதின் முந்நிலைகளையும் உணர்த்தும் ஓர் அரிய சொல். வைகல்-கழிந்த பொழுது-கழியும் பொழுது-கழிய வரும் பொழுது எனும் முப் பொருளும் படும். படவே எப்பொழுதும் எனப் பொருள் பெறும். நாளும் என்பதற்கும் எந் நாளும் என்றே பொருளாம். எனவே **வைகலும் உழுது** என்பதற்கு ஒவ்வொரு கழிகின்ற நொடியும், பொழுதும், நாளும் உழுது என்பது பொருளாம். உழுதல் தொழில் இடையறாது நடைபெறல் வேண்டும் என்பது குறிக்கப் பெற்றது. பயிருழவுக்குப் பொழுது வேண்டுவது போல் அறிவுழவுக்கும் பொழுது வேண்டும் என்பதும், அதற்கு முப்பொழுதும் உரியதாம் என்பதும் கூறப் பெற்றன.

**கற்பு நீர் பாய்ச்சி:** கல்வி என்னும் நீரைப் பாய்ச்சி. நெஞ்ச நிலத்தில் ஊன்றப் பெற்ற நினைவு என்னும் வித்திற்

குக் கல்வி என்னும் நீரைப் பாய்ச்சுதல் வேண்டும், என்பது. கல்வி நீராலன்றி ஊன்றப் பெற்ற வித்து வளர்தற் கியலா தாகலின் அது பாய்ச்சப் பெறுதல் இன்றியமையாததாம் என்க. கற்பு-கல்வி. மனத்தின் வாங்கு ஆற்றலேயே நினைவு என் கிறோம். அவ்வாங்கு ஆற்றல் கருவும் திருவும் எய்தி மெய்யறி வென்னும் பயிராக வளர்ந்து பெருகுதற்குக் கல்வி என்னும் நீர் பாய்ச்சப் பெறுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப் பெற்றது.

இனி, உழுதலும், நீரிடுதலும் ஆகிய பின்னைக் காப்பும் தேவையாகலின், ஒழுகு, நாண், நட்பு, உரன் ஆய இவை நான்கு புறமும் சூழப் பெறும் காப்பீடாகக் குறிக்கப் பெற்றன.

மெய்யறிவு வேளாண்மைக்கு ஒப்புர வாண்மை, அன் புடைமை, அறமுடைமை, நடுவு நிலைமை, பொச்சாவாமை, புறங் கூறாமை,பொய்யாமை முதலிய கூறுபாடுகளின் கடைப் பிடிப்பாகிய ஒழுங்கும், அறிவு, மனம்,சொல், வினை முதலிய வற்றின்கண் சேரும் குற்றங்களுக்கும் அவை மேல் வரும் பழி, கரிசுகட்கும் உயிர் நடுங்குதலாகிய நாணமும், அன்பு, அறிவு, இன்பு, பண்பு ஆகியவற்றிற் பொருந்தியாரது நட்பும், துன் பிற் றுவளாமை, இன்பிற் கெதிரேறல், சூழ்விற் கொளிந்துய் தல், பகைவர் உளம் வேறல் முதலியவற்றிற்காய மனவுர னும்-நான்கு புறத்தும் அமைக்கப் பெறும் வேலிகளாம் என்க.

**ஐய!-** என்று விளித்தது தலைவனாகிய இறைவனை.

**நீ பயந்த வாணாள் தாயம்:** நீ அருளிய வாழ் நாள் என் னும் உரிமைக் காலம். பயந்தது-பயத்தது-பயன் பெறத் தந்தது.

உயிர்கள் பயன் பெறும்படி தந்த உரிமைக் காலமாகிய இவ் வாழ்நாளில் செய்ய வேண்டுவன யாவை என்பனவற்றைக் குறித்ததாம் இப் பாட்டு.

தாயம்-உரிமை. இது தாய் வழியாக முதன் முதல் பெறப்பட்டதாகலின் இப் பெயர் பெற்றது. உலகின் மாந்த நாகரிகத்தின் முந்தைய உரிமை தாயுரிமையே ஆகலானும், தமிழர் மாந்த இனத்தின் தொடக்க நாகரிகத்தார் ஆகலானும், 'தாயம்' முதலிய தாய் முதல் குறித்த சொற்கள் தமிழ் மொழிக்கு நிறைந்த வழக்காதல் காண்க.

**தாயம்:** உரிமை-உரிமையுள்ள நிலம்-உரிமை பெற்ற நாடு-உரிமை பெறு சுற்றம்-முன்னைய வைப்பு-உரிமையால் பெறும் மேலாண்மை-பொருள் பயன்-ஈகம்-ஈகை, அடைக்கலம் முதலிய சொற் பொருட்களையும், தாயதி, தாயத்தார், தாயேடு, தாயோலை, (மூல ஏடு), தாய்க்கால், தாய்க் கட்டு, தாய்க் கண், தாய்க் காணி, தாய்க் கிழங்கு, தாய்க் கழகம், தாய்ச் சீட்டு. தாய்ச் சீலை (கோவணம்), தாய்ச் சுவர், தாய்ப் பாளை, தாய் முதல், தாய் வழி, தாய் வேர் முதலிய தலைமைப் பொருள் கொண்ட எண்ணிறந்த சொற்களையும் ஓர்ந்துணர்க.

தந்தைப் பெயரை முன்னடையாப் பெற்றுத் தலைமைப் பொருளும் உரிமைப் பொருளும் தரும் சொற்கள் தமிழில் இல்லாமையே, தமிழின் முன்மையையும் பிற மொழிகளின் பின்மையையும் தெளிவாகக் காட்டுவனவாம்.

**வையம்:** சகடம்-வண்டி-உருளை-உருளை போல் உருள்வதால் உலகம்.

இவ்வுலக உயிர்கள் உய்தல் வேண்டிச் செய்யப் பெறும் மெய்யறிவு வேளாண்மை என்று குறிக்கப் பெற்றதென்க.

**அயர்வின்றி**—*அயர்ச்சி யின்றி.*

**மெய்யின் விளைபுகு உணர்வோம்:** மெய்ம்மையின் வேளாண்மையைச் செய்யப் புகுந்த உளிளுணர்வுடையேம். நிலத்துக்கண் பயிரும், புலத்துக்கண் அறிவும் விளைவிக்கும் முயற்சியே மாந்த உயிர்களுக்கிட்ட வாழ்வு நோக்கமாம் என்றும், அந் நோக்கம் நடைபெறத் துணை புரிவதே மெய்யறிவினர்க்கிட்ட இறைக் கட்டளையாம் என்பதும் உணர்த்தப் பெற்றன.

**செய்பயன் முற்றும் நின் அளி அன்றே!:** மெய்யுணர்வுடையார் செய்யும் முயற்சியும், அம்முயற்சியின் பயனும் நின் ஊக்கமும், விளைவுமே யாகுமன்றி அவர்தம் விளைவன்று என்பது கூறப் பெற்றது. கருவிகளும், அக் கருவிகளுக் கமைந்த கரணியங்களும் அக் கருவி, கரணியம் இரண்டாலும் விளைந்த கருமங்களும், அக் கருமங்களின் பயனும் அவற்றிற்கு உரிமை நல்கியவர்க்கே ஆகுமன்றி அவ் வினைப்பாடுகளுக்கு உறுப்பாக அமைந்தார்க்கு என்றும் ஆகா என்னும் உண்மை ஈண்டு விளக்கப் பெற்றதென்க.

பயன் கருதாத உயிர்த் தொண்டே அறிவின் பயனும் என்பதும்; அவ் வறிவு விளைவுக்குக் கல்வி முதலிய முயற்சிகளில் ஈடுபடுவதே என்றும் செயத் தக்கதென்பதும் உரைக்கப் பெற்றன.

இப் பாட்டு புறத் திணையும் பொருண்மொழிக் காஞ்சியென் துறையுமாகும்.

## பதினாறாம் பாட்டு

வானினு முயர்க நெஞ்சே; வானத்து
மீனினும் படர்கதன் நினைவே; மின்னினும்
ஆன்றொளி சுடர்கநல் அறிவே; அறிவதும்
வாரியின் மிகுகவன் வலியே; வளியினும்
தான்றிற முறுக; தணலினுந் தெறுக;
தண்ணினுந் தண்ணுக; மண்ணினுந் திண்ணுக;
நுண்ணிய அணுவினும் நுண்ணிய தாகுக;
ஆவியும் மெய்யு மாகி
மாவினும் புள்ளினும் மயங்கியோர் பாலே!

### பொழிப்பு :

*சேய்த்தோர்க்கு அணிமையும் அணித்தோர்க்குச் சேய்மையுமாய்ப் புலப்படும் வானை விட உயர்ந்து செல்க, நெஞ்சமே. அவ் வானத்துள்ள மீன் கூட்டத்தை விடப் படர்ந்து பட்டு விளங்குவதாகுக, அதினின் றெழும் நினைவுகள்! மின்னலை விட் மிகுந்து சுடர் விடுவதாகுக அறிவு. அவ் வறிவின் வலிமை மழை முகிலை விட மிகுவதாகட்டும்; காற்றை விடத் திறம் பெறுவதாகட்டும்! தீயை விடச் சூடு மிகுவதாகட்டும்; குளிர்ந்த நீரை விடக் குளிர்வதாகட்டும்; நிலத்தை விட இறுகலுறட்டும்; நுண்மை யெய்திய அணுவை விட நுண்மை உடையதாகட்டும்; உயிரும் உடலு மட்டுமே ஆகி யிருந்து உள்ளம் விளக்க முறாமல் விலங்கு போலும் பறவை போலும் பிறர் மயக்கமுற நிற்பவரிடத்தே!*

## விரிப்பு :

இப் பாடல் புறத் துறையைச் சார்ந்ததாகும்.

உயிரும் உடலும் பொதிந்த உரு வெளித் தோற்றத்தால் மக்களைப் போலும் உள்ளத்தால் விலங்கைப் போலும் பறவையைப் போலும் பிறர் தோற்றங் கண்டு ஒத்த இனம் என்று விரும்பவும், உள்ளங் கண்டு வேறினமோ என ஐயுறவும் மயங்கவும் இடனுக வுள்ளவரிடத்து நம் நெஞ்சம் எவ் வகையில் திறமுறல் வேண்டும் என்பதாகக் கூறியதாகு மிப்பாட்டு.

இவ் வுலகத்துள்ள மாந்தர் யாவரும் ஒருரு ஒரு நிறையாகத் தோற்றமுற்றிருப்பினும் அவர் தம்மை வேறுபடுத்திக் கூறுதல் குற்றமன்றே எனில் கூறுதும். மாந்தர் யாவரும் நிலத்து விழுந்த நீர் போல் முந்தை தூய்மை யுற்றுப் பின்றை இடத்தானும் வினையானும் வேறுபடப்பட மனம் திரிதலும், மனந் திரியத் திரியப் பின்னையும் இயக்கத்தான் வேறுபடுதலும் உலக வியற்கை. இவ் விளங்கல் வேறுபாடு அறிவான் சம நிலைப்பட்டுப் பொருந்தத் தோன்றுதலும், அது கூடாவிடத்தே திரிந்து மாறுதலும் எவராலும் மாற்ற வியலாத இயற்கைக் கூறுபாடுகளாம்.

நீர் என்பது பொதுவெனினும், சிறப்புக் கருதுமிடத்து, அது ஊற்று நீர் என்றும் ஆற்று நீர் என்றும், இன்னும் பலவாறும் இடத்தாலும், உப்பு நீரென்றும், வெப்பு நீரென்றும், இன்னும் பலவாறும் வினையானும், இன்னும் உள்வினை கருதுகையில் அதனதன் உட்கூறு பலவாயும் வேறுபட்டு விளங்குதல் காண்கின்றேமா அல்லமா? ஐம் பூதப் பொருளில் ஒன்றுய அந் நீரே இவ்வாறு பல்வேறு திறத்ததாக விளங்குகையில், ஐம் பூதங்களும் தத்தம்முள் அளவினும் திறத்தினும்

பல்லாயிரங் கோடி வகையான கூறுபாடுகளில் ஒன்றியும் ஒன்றுமலும், இன்னும் அவ்வவற்றின் திறங்களுக்கேற்பக் கோள்களாலும் உடுக்களாலும் மனம் அறிவு வெளிகளினாலும் திரிக்கப் பெற்றும் ஆளப் பெற்றும் விளங்கித் தோன்றும் இவ் வுயிரினங்களும், அவற்றினும் தேறி விளங்கிய இம் மாந்த வினமும் எத்துணை எத்துணை வகையால் வேறுபட்டன என்பதைப் பூத நூலும், வேதியல் நூலும், கோணூலும், மன நூலும், அறிவு நூலும், உயிர் நூலும் விளங்கக் கற்றவர்கள் தெள்ளிதின் உணர்வர். உணரவே அவர் பொருட்டாக எழுந்ததிப் பாட்டு என்க.

இனி, மாந்தப் போலியர் உளரெனினும் அவர் மாவினும் புள்ளினும் மயங்கித் தோன்றுதல் எங்ஙனமெனின், கூறுதும்.

உயிர் விளக்கக் கூறுபாட்டான் உலகின்கண் காணப் பெறும் இவ் வுயிர்கள் கூர்தலற ஒழுங்கின் ஒன்றினின்று ஒன்று தேறியும் திரிந்தும், பெருகியும் விளங்குதல் வெள்ளிடைமலை. அவ்வாறு தேறித் திரிதலுறுங் காலத்து முதற்கண் உடல் திரிதலும் அத் திரிபுநிலைக் கேற்ப உள்ளந் திரிதலும் உயிர்நூல் கூறும் உண்மையாகும். இனி, உள்ளத் திரிபுக் கேற்ப உடல் மேன் மேலும் திரிதலுறும். அதன்மேல் உள்ளமும் மேன் மேலும் விளங்கித் தோன்றும். இவ்வாறு உடலும் உள்ளமும் முன்னது தோன்றப் பின்னது விளங்கியும், பின்னது விளங்க முன்னது தோன்றியும் ஒத்த நடையிட்டு மீமிசைக் கூறுபாடுகள் எய்தும் என்க. விலங்கினின்றும் புள்ளினின்றும் திரிந்து தோன்றிய மாந்தன் மேற்கொண்டு உள்ள விளக்கத்திற்குரியவனாகின்றான். அவ்வுள்ள விளக்கம் முற்றும் நடைபெறுவிடத்து மாந்த வுடலும் விலங்குள்ளமும் பெற்றோனாக விளங்குகின்றான். அவன் அவ் விலங்குள்ளத்தை முற்றும்

விட்டு வெளியேறும் வரை. அவ் விலங்குக்கும் பறவைக்கும் ஒப்பவே நடந்து வினை மேவுகின்ருன்.

பெண்டிர் யாவருமே ஆடவர் மருவுதற்கேற்றவராக விருப்பினும், அப் பெண்டிருள் ஒருத்தியையே தான் மருவுதற் கேற்ருளாகக் கொள்வது உள்ள வளர்ச்சியின் கூறுபாடே. விலங்கின நிலையினின்று முற்றும் மாறுபடா உள்ளங் கொண்டோனுக்கோ, எல்லாப் பெண்டிரும் மருவுதற்கேற்றவர் என்ற எண்ணமே கால் கொள்ளும். உள்ளம் மேலூர்ந்து சிறந்தோனுக்கோ, தான் மருவுதற் குரிய பெண் தவிரப் பிற ரெல்லாம் தாயும் தமக்கையும் தங்கையுமாகவே தோன்றுவர். ஒழுக்க நிலையான் காணப் பெறும் இவ் வேறுபாடும், உண்ணுதல், உறங்குதல், காத்தல், இணைதல் முதலிய வினை நிலையான் கருதப் பெறும், பிற வேறுபாடுகளும் கருதியே மாவினும் புள்ளினும் மயங்கியோர் என்று கூறப் பெற்றது.

நெஞ்சே! அத் திறத்தோரிடத்து வானினும் உயர்ந்து போதல் முதலாய திறமைகளை வருவித்துக் கொண்டு அவரிடத்தினின்று தப்பி உய்க என்பது பாட்டு.

வானினும் உயர்கஃ சேய்த்தோர்க்கு அணிமையும், அணித்தோர்க்குச் சேய்மையுமாய்ப் புலப்படும் வானை விட உயர்ந்து செல்.

தொலைவினின்று காண்போர்க்கு மிகவும் நெருக்க முற்றது போல் தோன்றினும், நெருங்கினுர்க்குத் தொலைவிலுள்ளதாகத் தெரிவது வானம். அதுபோல், தொலைவினின்று மாந்தற் றன்மை குன்றியோர்க்கு நாம் நெருக்கமுற்றவர் போல் தோன்றினுலும், நெருங்கிப் பார்க்குமிடத்து அவர் நிலைக்கு எட்டாதவாறு நம் நெஞ்சமும் வினையும் சேய்மையனவாகப் புலப்படுத்தல் வேண்டும் என்றவாறு. இனி வான் போலும் உயர்க என்னுது, வானை விட உயர்க என்று மேலும் உயர்ச்சி

காட்டியது, மாவினும் புள்ளினும் மயங்கியோரை இன்னுங் கீழ்மையினுல் தாழ்த்துதல் வேண்டி என்க.

நெஞ்சின் விளக்கம் முன்னெரு பாட்டில் கூறப் பெற்றது.

**வானத்து மீனினும் படர்கதன் நினேவே:** வானத்தே மீனினம் பகலிற் கரந்திருந்து இரவிற் படர்வது போல், அவர்க்கு ஆரவாரத்தே புலப்படா நின்று, அமைதியிற் புலப் படுத்துதல் வேண்டும் என்க. பகல் ஆரவாரக் காலமும் இரவு அமைதியின் காலமுமாம் என்றறிக. இனி, வெற்று வானம் போல தோன்றுமிடத்து உற்று நோக்கிய வழி மீனினம் படர்ந்திருத்தல் புலப்படுதல் போல், நுணுகி நோக்கினுர்க் கன்றி நுண்ணேக்கற்ற மாவினும் புள்ளினும் மயங்கியோர்க்கு நம் திறம் புலப்படுதல் தேவை யன்று என்ப தறிக.

வேண்டா விடத்து நம் நுட்பம் வெளிப்படுத்தப் பெறுவ தொன்றன்று என்க.

'நினேவு' என்னும் சொற் பொருள் 'நெஞ்சு நிலனுக நினேவு வித்தாக' என்ற பாட்டில் விளக்கப் பெற்றது, நினேவு மீன் படர்தலுக்கு வான் நெஞ்சம் புலப்படக் கூறியது காண்க.

**மின்னினும் ஆன்ருெளி சுடர்கநல் அறிவே:** மின்னித் தோன்றும் ஒளிப் போலும், ஆனுல் விளங்கியும் சுடர்தல் வேண்டும் என்பது. மின்னித் தோன்றுதலால் மின்ன லென் றும் மீன் என்றும் பெயர் பெற்றன. ஒளித் திறன் அவை போன்றதாம் என்னினும் ஆன்று சுடர்தல் வேண்டும் என்று வேண்டப் பெற்றது. சடுத்தப் பாய்ச்சலும், ஒளி மண்டிச் சுடர்தலும் பெற்ற அறிவு, மாவினும் புள்ளினும் மயங்கி யோர்க்கு ஒளி கொளுத்தலும், பயன் தருதலும் ஆகிய வினே கள் மேற்கொள்ளுதல் வேண்டுமன்ருே? எனவே சுடர்க அறிவு எனலாயிற்று. பயன் நல்குதலால் நல் அறிவு எனப் பெற்றது.

அறிவதும் வாரியின் மிகுகவன் வலி: அவ்வறிவும் கடல் போலும் மழை முகிற் போலும் வன் வலி மிகுவதாகுக என்றவாறு.

நீரை வாரலால் கடலும் முகிலும் வாரி எனப்பட்டன.

நீர் நிலத்தளவில் வலி மிக்க பொருள், ஆக்கலும் அழித்தலும் அதனிடத்து உளவாகலின், தேக்கமும் படர்வும் அதன் வலித் திறன்களாகும். தேக்க முற்றது கடலும், படர் வுற்றது முகிலும் ஆகலான் இரு பொருளொரு சொல் பெய்யப் பெற்றது; வாங்கலும் வழங்குதலும் அவ் விரண்டின் வினைகள். இவ் விரண்டானும் வலி மிகுதல், தம் நிலை தப்புதற்கும் மாவினும் புள்ளினும் மயங்கியோர் நிலை வெல்வதற்கும் வேண்டி என்க, அறிவற்றன வாங்கி, அறிவாயின வழங்குதலும் உய்த்துணர்க.

வளியினும் தான்திற முறுக: காற்றினும் திறமுற்று விளங்குக. கால்வதால் காற்றும், வலிதலால் வளியும் என்க. கால் நீளுதல். வலி-வளி-அடர்த்துப் பெருகுதல், வளைதல், சுழலுதல், வாருதல் ஆய வலிந்த வினைபற்றி யிருத்தலான் வளி என்ருயிற்று. இத் திறன்கள் முற்றும் பகை வெல்லுந் திறமாயின பற்றி அவை மிகுதல் வேண்டும் எனலானது.

தணலினும் தெறுக: தீயினும் பற்றி யழிக்க. தழல்–தணல். பற்றல், படர்தல், பெருகுதல், ஆட் கொள்ளுதல் ஆய வினைகள் தீயினுக்கு உரியவாகலின் தீ, தழல் எனப் பெற்றது.

தள்–தழ்–தழ–தழல்; தள்–தழ்–தழ–தழை. தீ, தள தள வென்று எரிந்தது. தள தள எனும் அடுக்கு தண தண வென்றும் வரும்.

தண் ணினும் தண்ணுக: குளிர்ச்சி யினும் குளிர்ச்சி யுறுக. அறிவு கனன்று எழுந்த விடத்து விளங்கியும் தண்ணிய

விடத்து அடங்கியும் தோன்றும். கனன்றது அறிவென்றும், தணந்தது அன்பென்றும் பெயர் பெறும். அறிவு வெப்பமும், அன்பு தட்பமும் வாய்ந்தது. அறிவு அடங்கி அன்பாகி ஆக்கமும், அன்பு எழுச்சி யுற்று அழிவும் சேர்க்கும்.

அறிவான் தெறலும், அன்பான் பொறலும் செய்து மாவினும் புள்ளினும் மயங்கியோரிடத்து விறல் பெற வேண்டும் என்பதாம் என்க.

மண்ணினும் திண்ணுக: நிலம் போலும் திண்மை யுடையதாகுக. மண்-பொருந்துதல், முன்பொரு பாட்டான் விளக்கப் பெற்றது. பூதப் பொருள்கள் நான்கு மேவிய ஐந்தாம் பூதம் மண். மண் மேலும் மேலும் இறுக லுறுவ தொன்ருக லின் மண் போலும் அதனினும் மிகவும் திண்ணுக வென்றது. மாவினும் புள்ளினும் மயங்கியோர் நம்மை அசைப்பவும் செய்வர் ஆகையால் அவர்வழித் தப்புவான் வேண்டி மண்ணினும் திண்ணுக என வேண்டியதாயிற்று.

நுண்ணிய அணுவினும் நுண்ணிய தாகுக: கரந் துறைதலும் கருவா யுறைதலும் அணு. நுண்மை எய்திய விடத்துப் பருமை பற்ருதாம். எனவே நுண்ணியதாகுக எனப் பெற்றது.

வான் போலும் உயர் நெஞ்சும், மீன் போலும் படர் நினைவும், மின் போலும் சுடர் அறிவும், வாரி போலும் வன் வலியும், வளி போலும் வெல் திறலும், தணல் போலும் கொல் திறலும், தண் போலும் குளிர் ஒடுக்கும், மண் போலும் திண் பாடும், அணுப் போலும் நுண் கரப்பும் கொண்டு, ஆவியும் மெய்யுமாய் ஆகி நின்ற மாந்தர் எனும் மாவினும் புள்ளினும் மயங்குற நிற்பாரிடத்து விளங்குக என்றவாறு.

இப் பாட்டும் புறத் திணையும் பொருண் மொழிக் காஞ்சி யென் துறையுமாகும்.

# பதினேழாம் பாட்டு

திமிர்தல் தவிர்ந்தன தோழி நிமிர்பின்றி!
துமிந்து மின்னோடி முகிலுங் கருமுற்றி
மழை பொழிந்து மண்பனிப்பத்
தழைபரப்பி உழைவருந்தி
மோத்தை புறங்கவிழக் கடமை மறியீன்று
ஊத்தை நாக்கொடு நக்கி உளமூறி
உண்ணிய வம்மினெம் மக்கா ளென்ன
வுட்கிடை யுணர்த்த. உள்ளுவந் தோடி
முன்னிளங் காலுறப் பின்கால் எவ்வி
முட்டச் சுரக்கும் முகிழ்முலைக் கென்றன்
கட்டிக் கிடக்கும் கவின்முலை தாழ்ந்தே!

## பொழிப்பு :

மதர்ப்பு தவிர்தலாயின தோழி, நிமிர்தலின்றி! தூறலைச் செய்து மின்னல் ஓடி, முகில்கள் கரு மூதிர்ந்து மழையைப் பொழிவித்து நிலத்தைக் குளிர்விப்ப, தழைகளைப் பரப்பிப் புறத்திருந்து வருத்தமுறும்படி ஆட்டுக் கடா முகந் திருப்பிக் கவிழ்ந்து கொள்ள, பெண் ஆடு குட்டிகளை ஈன்று தந்து, கருவுயிர்ப்பு நீரை நாக் கொண்டு நக்கித் தூய்மை செய்து, உளத்தே தாய்மை யுணர்வு ஊறியதாய் "பால் உண்ணுதற்கு வாரீர் எம் மக்காள்!" என்னத் தன் உள்ளக் கிடக்கையை உணர்த்துதல் செய்ய, அக் குட்டிகள் உள மகிழ்ந்து அதனருகில் ஓடி, இளமையான முன்னங் கால்களை நிலத்தே படிதலுற

னூன்றி, பின் கால்களால் எவ்வுதல் செய்து, தம் புனிற் றிளந் தலைகளான் செய்கின்ற, அம் முட்டுதலுக்குச் சுரக்கின்ற அப் பெண் யாட்டின் முகிழ்த்த முலைகளின் தகைமைக்கு வறிதே கச்சையான் கட்டப் பெற்றுக் கிடக்கும் கவின் தோய்ந்த என் முலைகள் தாழ்வுற்றவாக.

## விரிப்பு :

இப் பாடல் புறத் துறையைச் சார்ந்தது.

அழகும் இளமையும் வாய்ந்தாள் ஒருத்தி, தாய்மை யெய்தாத தன் உறுப்பு நலன் அழியக் கூறி, தனக்கு வந்து வாயாத பிள்ளைப் பேற்றுக்கு ஏங்கி வருந்தி நகைத்துக் கூறிய தாகும் இப் பாட்டு.

பிள்ளைப் பேற்று நலன் ஒன்றின் பொருட்டாகவே வாய்க் கப் பெற்றிருக்கும் அழகு சான்ற முலைகள், அப் பேறு வாயா விடத்து வறிதே கட்டுப் பெற்று மதர்த்துப் பொங்கி யெழுந்து அண்ணுந்து நிற்றல் எற்றுக்கோ எனத் தம் மதர்ப்பு தவிரவும் ஏமாப்பு தாழ்வுறவும் செய்தன என்றவாறு.

பெண்மை முற்றித் தாய்மையாய்க் கனியாத விடத்து அத் தாய்மைக்கே உரிய சிறப்புறுப்பாகிய முலையின் கவின் மிக்க நிமிர்பு நாணுத்தரத் தக்கதாகும் என அத் தலைவி நெஞ் சழிந்தாள். ஆகவே அவள் நெஞ்சழிவுக்குத் தக்கவாறு அவ் வுறுப்புகளும் பொங்குதல் தவிர்தலும், நிமிர்தல் தாழ்தலும் செய்தன என்க.

கட்டுதலுற்றுக் கிடக்கும் கவின் முலையின் தன்மையினை இதுகாறும் நினையாளாய நின்ற தலைவி தன் இற் புறத்தே குட்டிகளை ஈனுதலுற்று உளமுவந்து அவற்றைப் பாலுண்ண

அழைத்த பெண் யாட்டையும், அதனருகே ஓடித் தம் தலைக ளான் தாயின் மடியினை முட்டுவித்துப் பாலருந்தும் மறிகளை யும் கண்டு, தன் பெண்மை நலம் தாய்மையாய்க் கனியாது காய்கின்ற துணர்ந்து, நெஞ்சு அழுங்க, அருகே நிற்கும் தோழியை விளித்துத் தன் ஆற்ருமை தோன்றக் கூறினுள் என்க.

**திமிர்தல்:** விம்முதல், புடைத்தல், பெருகுதல் எனப் பொருள்படும்.

இனி, திமிர்தல் என்னுஞ் சொற்குப் பூசுதல், அப்புதல் என்றும் பொருள் கொண்டு, மார்பகத்தே பூசப் பெறுவன வாகிய சந்தனக் குழை முதலிய விரைப் பொருள்கள் பூசு தலைப் பெருது தவிர்க்கப் பெற்றன என்றும் கொள்ளலாம். எனினும் செயற்கைப் புனைவு சாரும் பின்னைப் பொருளினும் இயற்கை நலஞ் சார்ந்த முன்னைப் பொருளே சாலப் பொருந் துவதாம். என்னை? நாணுடைமை பற்றியாம் என்க.

**தவிர்ந்தன:** தவிர்தலாயின.

**நிமிர்பின்றி:** விறைப்பின்றி, ஏமாப்பின்றி, அண்ணுத்த லின்றி.

**துமிதல்:** தூறுதல், சிறு மழை பெய்தல், துளி; துமி.

**மின்னேடி .......... மண் பனிப்ப:** தொடக்கத்தே தூற லாகிப் பின் வலித்து மழையாகப் பெய்ததால் நிலம் குளிர்ந் தது என்க.

**முகில் கருமுற்றிப் பொழிதல்:** முகில் மழைத் துளி நிரம் புதல் கரு முற்றுதல் போலாம் என்க. மழை பொழிதல் கரு

உயிர்த்தலைப் போலாம் என்க. இனி, வினை அடிப்படையிலன்றி நிற வடிப்படையாலும் பொருள் கொண்டு, முகில் கருநிறம் நிரம்பிப் பொழிதலுற்றது என்றுங் கொள்ளலாம்.

**மண் பனிப்ப:** நிலம் குளிர்மை யெய்த.

**மோத்தை தழைபரப்பி உழைவருந்திப் புறங்கவிழ:** பெண் ஆடு குட்டி ஈனுவதற்கென, ஆண் ஆடு இலை தழைகளைக் கொணர்ந்து நிலத்தே பரப்பி, ஒரு புறத்தே இருந்து வருந்தி முகங் கவிழ்ந்து நின்றதாம் என்க.

பெண் ஆடு கருவுயிர்த்தலைத் தான் காணக் கூடாதென ஆண் சிறிது தொலைவில் நின்று தலை கவிழ்ந்து கொண்டது. பெண் கருவுயிர்க்குங்கால் படுந்துயர் ஆணுக்குந் துயரை வருவித்தது, அது தன் பிணையின் மேல் வைத்த அன்பால் என்க. மோத்தை ஆண் ஆடு.

**கடமை:** பெண் ஆடு.

**மறி:** குட்டி.

**ஈனல்:** கருவுயிர்த்தல்.

**ஊத்தை:** கருவுயிர்ப்பு நீர்; குட்டியைப் போர்த்துள்ள வழவழப்பான கரு நீர்.

**ஊத்தை நாக்கொடு நக்கி உளமூறி:** குட்டிகளின் மேலுள்ள கருவுயிர்ப்பு நீரைத் தன் நாவைக் கொண்டு நக்கித் தூய்மை செய்தது பெண். அவ்வாறு செய்யச் செய்ய அதன் உள்ளத்தே தாய்மை உணர்வு ஊறி நின்றது என்க.

**உண்ணிய வம்மின்.........உணர்த்த:** ஊத்தைதயைத் தூய்மை செய்த பெண் ஆடு குட்டிகளைத் தன்னிடம் வந்து பாலருந்துமாறு தன் உள்ளத்தின் விழைவு தோன்ற விளித்தது என்க.

தாய் தம்மைப் பாலுண்ண அழைத்ததும் குட்டிகள் உள்ளம் உவந்து ஓடின என்றவாறு.

**முன்னிளங் காலுறப் பின்கால் எவ்வி:** முன்னங் கால்கள் நிலத்தே உறும்படி வைத்துப் பின் கால்களால் உந்தி எக்குதல் செய்து.

**முட்ட:** முட்டுதல் செய்ய. குட்டிகள் தாயிடம் பால் அருந்துங்கால் தம் இளந் தலையால் மடியை முட்டி முட்டி முலைத் தசையுள் பால் மிகுந்து சுரக்கும்படி செய்வது இயற்கை.

**முட்டச் சுரக்கும் முகில் முலைக்கு:** குட்டிகளின் இளந் தலை முட்டுதல் செய்தலால் சுரக்கின்ற முகிழ்த்து நிற்கும் முலையினுக்கு.

**என் கட்டிக் கிடக்கும் கவின்முலை தாழ்ந்தே:** வறிதே கட்டப்பட்டுக் கிடக்கின்ற அழகு பொருந்திய என் முலைகள் தாழ்ந்தனவாக.

ஆட்டின் முலை பால் சுரந்து, கூம்பித் தோன்றுவதால் முகிழ் முலை எனலாயிற்று. அவ்வாறு குழவி வாய் வைத்தலும், அதனுல் முலை சுரக்கப் பெறுதலும், மலர்ச்சி யுறுதலுமின்றி

வறிதே கிடத்தலால் கவின் முலை எனலாயிற்று. பயனில்லதான வெறும் அழகு சிறப்பிழந்த தாகையால் அஃது இழித்துக் கூறப் பெற்ற தென்க.

ஐயறிவே வாய்க்கப் பெற்ற விலங்கினங்கள் கூடத் தாய்மை எய்துதலும் அதனுல் மகிழ்தலுமாக இருக்கையில், ஆறறிவு பெற்றுளாகிய தான் தாய்மை நலம் எய்தாளாக மலட்டுத் தன்மை வாய்ந்திருப்பது தலைவிக்கு மிகு துயரை வருவித்ததாம் என்க.

எத்துணை தான் பெண்மை நலம் வாய்ந்தவளாக விருப்பினும் ஒருத்தி பிள்ளைப் பேறின்றி இளமை யழிதல் மிகவும் வருந்துதற் குரியது. அவள் அழகும் இளமையும் சிறப்புப் பெறுவன அல்ல-என்றவாறு.

பொருந்தாக் காமத்துப் போதரும் பிற கருச் செய்திகள் யாவும் தலைவன் தலைவியரின் காதல் தொடர்புடையனவாக மட்டும் இருப்ப, இது தமிழிலக்கியத்துப் புதுக் கருத்தாக நிற்றலோடமையாது, தலைவன் தலைவிக் குற்ற இணைப்பு பொருத்தமற்றதாகி, இவளை மலடாக்கியது பற்றி, இதுவும் பொருந்தாக் காமத்துள்ளேயே அடக்கப் பெற்ற தென்க.

இப் பாட்டு பெருந்திணையும் இல்லவை நகுதலென் துறையுமாகும்.

## பதினெட்டாம் பாட்டு

நகையும் வாரா தழுகையும் விளையாது
பகையும் கொள்ளா துறவும் பாராது
திகைப்பல் யானே முகில்திரி விசும்பிற்
கயிருடு தொம்பர் கைக்கழி யன்ன
உயிராடு காதற் கூன்று கோலனைத்
துறக்கக் கூறினள் அன்னை;
இறக்கக் கூறின மென்றறி யாமே!

## பொழிப்பு :

நகைப்பும் தோன்றாது; அழுகையும் விளையாது. நெஞ்சம் பகையும் கொள்ளாது; உறவையும் எண்ணாது, திகைப்புறுவேன் யான்! முகில் திரிகின்ற விசும்பின்கண் கயிற்றின் மேல் நின்று ஆடும் தொம்பரின் கையகத்துள்ள கழியைப் போல, உடல் மேல் நின்று ஆடிக் கொண்டிருக்கும் இவ் வுயிருக்குப் பற்றுக் கோடாய் விளங்கும் கோல் போன்றவனைக் கை நெகிழ்த்து விடு எனக் கூறினாள் என் அன்னை; அது வழி என்னை இறந்து விடு எனக் கூறினோம் என அறியாளாக.

## விரிப்பு :

இப் பாடல் அகத் துறையைச் சார்ந்தது.

'ஊசலாடும் என் உயிர்க்குப் பற்றுக்கோடாய் நிற்கும் என் காதற் குரியவனைத் துறந்து விடக் கூறிய அன்னை, அது வழி என்னை இறந்து விடக் கூறுவதறியாமல் கூறினாளாக, அவள் அறியாமை கருதி நகைக்கவும் தோன்றாது; உண்மை

யாகவே என்னை இறக்கக் கூறுமையால் அழுகையும் விளையாது; அவள் அன்பு கருதி என் நெஞ்சம் பகைமையும் கொள்ளாது; அவளென் அன்னை என்ற உறவையும் எண்ணிப் பாராது. எனவே திகைப்புறுவேன் யான்!' எனத் தலைவி தன் தோழியிடத்துக் கூறி யழுங்கிய தாகும் இப் பாட்டு.

**நகையும் வாராது:** பற்றுக்கோடாய தொன்றைப் பற்றற்க என அறியாமையால் கூறியது நகை விளைப்ப தென்னினும், தன் மேல் வைத்த அன்பின் முதிர்வால் அன்னை அவ்வாறு கூறினுளாகலின் அது நகையை விளைவிக்க வில்லை-என்றவாறு. இனி, தன் கேள்வனைத் துறக்கக் கூறிய கூற்று, தான் இறக்கக் கூறியதே என்று அறியாமற் போனது நகைப்புக்குரிய தெனினும், தன் அவலங் கருதுமிடத்து நகையும் வருவியாத தொன்று என்றுங் கொள்க.

**அழுகையும் விளையாது:** தான் இறத்தற் கேதுவாகிய தன்மையின் தலைவனைத் துறக்க எனக் கூறியது அழுகையை வருவிப்ப தென்னினும், அஃது அறியாமையாற் கூறியதாகலின், துன்பத்தையும் விளைவியாது என்றுள் என்க.

**பகையுங் கொள்ளாது:** பகையைப் போலும் தான் இறந்து படுவதாகியதோர் உத்தியைக் கூறினளேனும், அது தன் நலங் கருதிக் கூறிய கூற்றே ஆகலான் பகை கொள்ளுதற் கிடந் தரவில்லை என்றுள்.

**உறவும் பாராது:** இனி, தன் நலங்கருதி அன்பால் கூறிய கூற்றுகி உறவுமுறைக்கு உறுதி பயப்பதேனும், தன் உயிர் கெடுமாறு கூறியதாகலின் உறவு நோக்கியும் அது கொள்ளப்படுவ தன்று என்றுள் என்க.

**திகைப்பல் யானே:** இவ்வாறு ஒரு புறம் நகைப்பிற்கும் மறு புறம் அழுகைக்கும், ஒரு புடை பகைக்கும் மறு புடை உறவுக்கும் உரியதாகிய அன்னையினது கூற்றின் மெய்ப் பொருள் தேராது திகைக்கின்றேன் யான் என்றவாறு.

திகைதல்—திசைதல்-மயங்குதல்-வேறுபாடு உணராது தடுமாறல்.

**முகில்திரி விசும்பிற் கயிருடு தொம்பர் கைக்கழி யன்ன:** முகில் திரிகின்ற வானத்திடைக் கயிற்றின் ஆடும் தொம்பர் தம்மை நிலை நிறுத்த வைத்துக் கொள்ளும் கைக்கோல் போல்-எடுத்துக்காட்டு உவமை.

கயிற்றில் ஆடும் தொம்பர் கைக் கழியைத் துறக்கு மிடத்து; அஃது உயிர்க் கூறு விளைத்தல் போல். உயிர்க்குப் பற்றுக்கோலாய் விளங்கும் தன் தலைவனைத் துறப்பதும் தன் உயிர்க்கு ஊறு விளைவிக்குமாகலின், அஃது தன்னை இறப்பக் கூறியதே ஆகும் என வேண்டி, **உயிராடு காதற்கு ஊன்று கோலன்** என்ருள்.

விசும்பிற் கயிற்றின் மேல் ஆடும் தொம்பருக்கு, மெல் லியதாய் நிலத்தின் மேற் பாவாது உறுவாரிடைத் தொடர் பற்றுத் தனிமையில் விளங்குகின்ற உடல் என்னும் கயிற்றின் மேல் நின்ருடும் உயிரையும், தொம்பர் பற்றும் கைக் கழிக் குத் தன் உயிர் பற்றிக் கொள்ளும் தலைவனையும் உவமை கூறினுள் என்க.

இனி, தன் தலைவனைத் துறந்து விடக் கூறுவது, கயிற்றின் மேல் நின்ருடும் தொம்பனை நோக்கி அவன் பற்றியுள்ள கைக் கழியினைத் துறந்து விடு என்று கூறுவதற் கொப்பாகும் என்

ளுள் என்க. அஃது அவன் இறந்துவிடற்கு ஏதுவாவது போலவே, தன் காதலனைத் துறப்பதும் தன் இறப்பிற்கு ஏது வாகும் என்றும், உணர்த்தினுள் என்க.

உடலைக் கொடிக்கு உவமையாகக் கொள்வதற் கொப்ப, ஈண்டுக் கயிற்றுக்கு உவமை கூறப் பெற்றது. தன் விருப்பிற் கேற்பப் பின்னிக் கொள்ளும் கொடி போலன்றித் தன்னுடல், இழுத்துக் கட்டப் பெற்ற கயிறு போல் கட்டுப்பட்டுக் கிடப் பதும், அதுபோல் கட்டுப் பெருத தன் உயிர் தன் தலைவனைப் பற்றுக்கோடாகக் கொண்டு காதல் ஆட்டு நிகழ்த்துவதும் உவமையால் உணர்த்தப் பெற்றன என்க.

**ஊன்று கோலன்:** ஊன்று கோலாகி நிற்கும் காதலன், உயிர்க்கு ஊன்று கோல் போன்றவன்.

**தொம்பர்:** தொம்பக் கூத்து ஆடுவார்.

**தொம்பம்:** கழைக் கூத்து வகையி ஞென்று. கழைக் கூத்து கம்பக் கூத்து என்றும் வழங்கும். மேனுட்டினர் இக் கால் ஆடும் BAR ஆட்டமும் கழையாட்ட வகையினென்றே. கழையைக் கிடையாகவும் நட்டும் வைத்து அதன் மேல் நின் முடும் ஆட்டம். கழைக்கு மாருகக் கயிறும் கட்டப் பெற்று ஆடுதலும் உண்டு.

இது குறிஞ்சி யென் திணையும், தோழிக்குத் தலைவி அறத் தொடு நிற்றல் என் துறையுமாம்.

# பத்தொன்பதாம் பாட்டு

மழையினும் இருளினும் மருளா யாமே
ஊரலர் உரைத்ததும் ஒழிகென் றொழித்துப்
புணர்ச்சி வேண்டிக் குறியிடஞ் சென்றுங்(கு)
அச்சந் தவிர்த்த பிழையு மொன்றே!
இளமை மடவோர்க் கேமம் வேண்டி
அறவோர் கொளுத்திய அறவுரை கொளாது
கொண்ட கொள்கையுங் களவின் மாறி
நயப்பு வேண்டி அவனுழைச் சென்றுங்கு
மடமை வீழ்த்திய பிழையும் இரண்டே!
காட்சி கவ்வியும் கைதொடத் தந்தும்
மீட்சி யின்றி யணைய வடங்கியும்
வரையா வொருவற்கு வயவுமே லிட்டு
நாண முகுத்த பிழையும் மூன்றே!
இளமுகை வெண்பல் துவர்வாய் கனியிதழ்
கிளர்முலை நுணங்கிடை தடங்குறங் கென்றவன்
காமுற்று மொழிந்த காலையும் ஏமுற்றுப்
பயிர்ப்பற வொடுங்கிய பிழையும் நான்கே!
என்றிவை வழி
நம்மருஞ் செல்வம் அவனத்தத் தந்தே!
இம்மருங்கு பின்யா மழுங்கல்
வெம்முது பெருநகை விளைக்குமா லெமக்கே!

## பொழிப்பு :

மழை பொழி தரும் பொழுதும் இருள் மண்டிய இராக் காலத்தும் நாம் மருட்சி யின்றி, ஊரார் அவனெடு கொண்ட தொடர்பு பற்றித் தூற்றிக் கூறிய இழிவுரைகளை ஒழிகென்று புறந் தள்ளி,அவன்பாற் பழகுதலை விரும்பி, குறிக்கப் பெற்ற இடத்தே சென்ற வகையில் நமக்கியல்பாகிய அச்சத்தை நீக் கிய பிழை ஒன்ருகும். இளமைப் பருவத்தாற் பேதைமை நிரம்பிய கன்னியர்க்குத் தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டு, உலகியலற முணர்ந்த பெரியோர் கற்பித்துக் கூறிய ஒழுக்க வுரைகளைச் செவியிற் கொள்ளாது நாம் கடைப் பிடித்த உறுதிப்பாட்டையும் அவனெடு பழகிய களவுக் காலத்தே கை விட்டுக் காதலை வேண்டி அவன் இருப்பிடம் சென்ற வகையில் நம் அறியாமை போன்ற அடக்கத்தைக் கை ஞெகிழ விட்ட பிழை இரண்டாகும். அவனைக் காணுதற் குக் காந்துதலோடு அவாவியும், கண்டபின் நம் கைகளைத் தொட்ட அளவிலேயே அவற்றை அவன்பால் தந்தும்,மீட்டுக் கொள்ளல் இன்றி அவன் நம்மை அணைத்த விடத்து அவனுள் அடங்கியும், நம்மை மணந்து நில்லாத ஒருவனுக்காக வேட்கை மிகுதியால் வெட்கத்தை உகுத்து விட்ட பிழை மூன்ரும். தோன்றிய அரும்பு போலும் வெள்ளிய பற்கள் என்றும்,பவழம் போலும் சிவந்த வாயென்றும்,கனி போலும் குழைவுற்ற இதழ்கள் என்றும், கிளர்ச்சி யுற்ற முலைகளென் றும், மெல்லியதாய் அசையும் இடை யென்றும், பருத்த தொடை யென்றும் அவன் மருவல் நோய் முற்றி மெல் லெனக் கூறிய பொழுதும் அவன் மொழியான் இன்புற மயங்கி உடற் கியல்பாகிய கூசுத லுணர்வை ஒடுக்கிக் கொண்ட பிழை நான்காம். என்றிந் நான்கு வழியிலும் பெறற்கரிய தாகிய நம் பெண்மைச் செவ்வியை அவன் நுகர்ந்து பொலிவழிக்கும்படி அவனிடம் தாமே வலியத் தந்து,

இப் பிந்திய பொழுதில் தனித்து வருந்துதல், கொடுமை முற்றிய பெருத்த நகைப்பை எமக்குத் தோற்றுவிக்குமாக.

## விரிப்பு :

இப்பாடல் அகத் துறையைச் சார்ந்தது.

தலைவனெடு மணவாது ஒழுகிய தலைவி ஊரார் உரைத்த கௌவை மொழிக் காற்ருது வருந்த, தோழி தலைவியின் வருத்தத்திற்கு அவள் அறியாமையே கரணியமென்று உலகியல் அறங் கூறிப் புறத்தே நிற்கும் தலைவன் செவிப் பட இடித்துக் கூறியதாகும் இப் பாட்டு. அவள் பேதைமையால் ஆற்றிய வரையா வொழுக்கம், ''வெம்முது பெருநகை விளைக்குமாறு'' ஈண்டுப் படர்ந்தது என்பது தோழியின் கருத்து. பெருநகை, எள்ளற் பொருட்டு விளைந்த தென்க.

தலைவியின் இற்றை வருத்தத்திற்கு நான்கு பிழைகள் பொருட்டுகளாயின. அவை: ஊரார் கூறும் அலர் மொழிகளுக்கும் மழைக்கும் இருளுக்கும் அஞ்சாது அவனெடு கூடுதல் வேண்டிக் குறித்தவிடம் நோக்கிச் சென்றது;

தன் போலும் பருவப் பெண்டிர் உலகியல் அளவில் ஈடுபடும் முறைமை குறித்து அறவோர் கூறிய அறிவுரைகளை எண்ணுது, தானே அறிந்தாள் போல் செருக்குற நடத்தல் வழித் தனக்காய அடக்கத்தை விட்டது;

பருவ உணர்வால் தன்னை மணந்து கொள்ளாத ஒருவன் தன்னைத் தீண்டுதற் கிடமளித்துத் தனக் கியல்பாகிய நாணத்தைக் கை விட்டது;

காதன் மயக்கத்தால் அவன் தன்னை ஏமாற்றும் நோக் கொடு வண்ணித்த புகழுரைகளைக் கேட்டுக் கூசாது நின்று அவன் வழிப் பட்டது;

—''என்றிந் நான்கு பிழைகளுக்கும் தானே காரணியமாகி நின்று, தன் பொற்பழிந்த பின்றை இக்கால் கிடந்து வருந்து தலால் பயன் என்னை; நகைப்பிற் கிடமானது இவ் வருத்தம்'' என்று தோழி, தலைவியின் அறியாமையைக் கடிந்தாள் என்க. இம் மொழிகளைத் தனித்து வருந்தும் அவள் மட்டும் கேட்கு மாறு உரைத்தல் சால்பில்லை என வுணர்ந்த தோழி, தலைவன் வந்து புறத்தே நிற்றலை அறிந்து அவனும் கேட்குமாறு உரைத்தாள் என்க.

**மழையினும் இருளினும் மருளா:** மழைக்கும் இருளுக் கும் அஞ்சாது, அற்றைத் தன்னை நனைக்கும் மழை நீருக்கும், வெளிப்பட அருமையாய இருளுக்கும் அஞ்சாதாயினை. இற்றை ஊரார் உரைக்கும் பழிச் சொல்லாகிய மழைக்கும் வெளிப்பட அருமையாகிய இருள் போன்ற காவலுக்கும் அஞ் சுதல் ஆயினை எனும் கருத்துப்பட மொழிந்தாள் என்க.

**ஊரலர்......... ஒழித்து:** ஊர் கூறும் பழமொழிகளை அன்று நீ ஒழித்தாய்; இன்று உன் செயல் உன்னையே ஒழிக்க லாயிற்று என்னும் குறிப்புத் தோன்ற வுரைத்தாள்.

**புணர்ச்சி வேண்டி:** கூடுதல் விரும்பி.

**.குறியிடம்:** கூடுதல் பொருட்டுத் தலைவனால் குறிக்கப் பெற்ற இடம்.

**அச்சம் தவிர்த்தல்:** பழிக்கும், தவறான ஒழுக்கத்திற்கும் வேண்டுவதாகிய அச்சம். தவிர்க்க வேண்டாத ஒன்றைத்

தவிர்த்தாய்; இக்கால் அது நின்பால் தவிர்க்க வேண்டாதாக வந்து பற்றியது என்றுள் எங்க. அச்சம்–அஞ்சுவ தஞ்சும் அறிவுடைமை.

**இளமை மடவோர்:** இளமைப் பருவத்து இயல்பாகிய பேதைமை நிரம்பியோர்.

**ஏமம் வேண்டி:** காவல் வேண்டி.

**கொளுத்திய:** அறிவுறுத்திய.

**கொள்கை:** கைக்கொள்ள வேண்டிய கோட்பாடு.

**களவின் மாறி:** களவுக் காலத்தே கைவிட்டு.

**நயப்பு:** காதலிப்பு, விழைபாடு, விருப்பம்.

**மடமை வீழ்த்தல்:** பெண்களுக்கு இயல்பாய தாகிய மடப்பத்தைக் கைவிடுதல். **மடப்பம்**-கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை யெனும் அரும் பண்பு.

"அன்று நீ கொள்ள வேண்டிய மடப்பத்தைக் கொள் ளாது வீழ்த்தினே; இன்று அது நின்னை வீழ்த்திற்று; காண்" என்றவாறு.

**காட்சி கவ்வுதல்:** காணுதற்கான அவா வுணர்வு.

"அன்று நீ காட்சிக் கங்காந்தனே! இன்று நீ காட்சி யின் றிக் குன்றினே"-என்றவாறு.

**கைதொடத் தந்து:** அவன் அன்று தொடுகையில் நீ நாணிப் பின்வாங்காது நாணுத லின்றி அவன் தொடுதலை

நீயும் விரும்பினை; இன்று உன்னைத் தீண்டுவாரு மின்றி இழித்துப் புறந் தள்ளப் பட்டாய் அன்று நாண மிழந்தனை; இன்று நாண முற்றனை என்றவாறு.

**மீட்சியின்றி:** மீட்டுக் கொள்ள லின்றி.

**அணைய வடங்கி:** அணைத்தற்கு அடங்கி யுடன் பட்டு.

**வரையா ஒருவன்:** மணத்தால் உரிமை யாக்கப் படாத ஒருவன்.

**வரைதல்:** அளவுப் படல்-எல்லை யிடல்-உறுதி யிடல்-ஆடவரும் பெண்டிரும் வரைதுறை யின்றி விலங்கும் பறவையும் போற் கலத்தல் ஆறறிவு சான்ற மாந்தர்க்கு விலக்கப் பட்டதோர் ஒழுக்கமாகலின் அவர் ஈடுபாட்டிற்கு எல்லை வகுக்கப்பட்டது. இவனை இவளும், இவளை இவனும் என்று அளவுரைக்கப் பெறுவதே—எல்லை கட்டுவதே-உறுதிப்படுத்து வதே வரைதல் எனப்படும். வரைதல்—மணத்தல்.

**வயவு:** காதல் நோய்.

**நாணம் உகுத்தல்:** பெண்டிர்க்கு இயல்பாகிய நாணம்.

**'உயிரினும் சிறந்தன்று நாணே'** என்றுரைக்கப்பட்டது.

**இளமுகை:** எழுச்சி யுறும் அரும்பு.

**துவர்:** சிவப்பு—சிவந்த பவழம்.

**குறங்கு:** தொடை, உடல் பிளவுறும் பகுதி யாதலின் குறங்கெனப் பெயரியது. கவைத் தொடக்கம்.

**தடங்குறங்கு:** பெரிய தொடை.

**ஏமுற்று:** மயங்குத லுற்று.

**பயிர்ப்பு:** பெண்களுக்கியல்பாகிய ஓர் அருவருப்பான கூசுதல் உணர்வு.

**அறவொடுங்கிய:** முழுதும் இலை யெனும்படி ஒடுங்குத லுற்ற.

மணவாத ஒருவன் தன் உறுப்புகளைப் புகழ்ந் துரைக் கையில் கூசுதலின்றி அருவருப்படையாது அன்று கேட்டுக் கொண்டிருந்தனை! இன்று நீ உலகின் முன் கூசுதலை யுடையை யாய் அருவருப்படையப் பெற்றனை.

**என்றிவை வழி:** என்றிந் நான்கு வழியிலும்.

அவன்பால் செல்லுமுன் பழி சேருவது பற்றிய **அச்சத்தையும்,** இளமைத் துடிப்பால் **மடப்பத்தையும்,** அவன்பால் பழகுமுன் **நாணத்தையும்,** அவனொடு பழகுகையில் **பயிர்ப்பாகிய** கூசுதலையும் தவிர்த்த இந் நான்கு பிழைகளையும் முறையே செய்திராமல் இருப்பின், இக்கால் பொலிவிழந்து நீ வருந்தல் வேண்டி யிராது என்றனள் என்க. இவை நான்கும் பெண் ஒருத்திக்கு இருக்க வேண்டிய அருமை யுடைத்தான செல்வம் ஆகலின் அவற்றைத் துறந்தார் பெறுவது துன்பமே என்றாள் என்க.

**நத்துதல்:** விரும்பி நுகர்தல்.

நின் பெண்மை நலத்தை நீயே விரும்பி அவன் நுகருமாறு தந்தனை. இந் நிலை இரங்குதற் குரிய தன்று; நகைத்தற் குரிய

தாம். வெறும் நகையன்று; பெரும் நகையாகும் என்றது காண்க. இனி, இத்தகைய பிழைபாடுகள் பெண்டிர்க்கு வழி வழி வந்தும் இன்னும் அவர்பால் அவ் வொழுக்கக் கடப்பாடு கள் இல்லாமலிருத்தல் முதுபெரும் நகை விளைத்தது என்றுள். இனி, இந் நகை மகிழ்ச்சியான் வருவதன்றி, சினத்தானும் அருவருப்பானும் வருதலால் வெம்முது பெருநகை என்று மொழிந்தனள் என்க.

வெம்முது பெருநகை: வெப்பஞ் சான்று முதுமை யுற்ற பெருத்த நகை.

பெண்டிர் யாவரும் தமக்கியல்பாகிய அச்சத்தையும், மடப்பத்தையும், நாணத்தையும், பயிர்ப்பையும் தமக்குற்ற அருஞ் செல்வமாகக் கருதல் வேண்டும் என்றும், இளமைப் பருவமுற்ற பெண்டிரோ அவற்றைத் தம் பெருமைக்குரிய பண்புகளாகவும் உயிராகவும் கைக்கொள்ளுதல் வேண்டும் என்றும், அவ்வாறு கடைப்பிடியா விடத்து வருகின்ற இழிவும் இழுக்கும் தம்மைப் பெரிதும் துயர்ப்படுத்தும் என்றும், அத் துயர் பிறரை இரங்கச் செய்யாது எள்ளி நகைக்க இடந் தரும் என்றும், இவையே இளமை மடவோர்க்கு ஏமம் வேண்டி, அறவோர் கொளுத்திய அறவுரை என்றும் இப் பாட்டான் விளக்கப் பெற்றது.

இது குறிஞ்சி யென் திணையும், வரையா வொழுக்கத்து, ஊரலர் கண்டழுங்குந் தலைமகட்குத் தலைவன் செவிப்படுப் பத் தோழி அறிவுறீயது என் துறையுமாகும்.

## இருபதாம் பாட்டு

இதுகொல் விழவே; நகையா கின்றே!
புதுமடிக் கலிங்கம் கதுமத் தாங்கி
உழுந்தின் கொழுமாப் புழலை முக்கிப்
பயறு தலைப்பெய்த பாஅல் மிதவை
வயிறு முகந்தெரிய மாந்தி உயிர்ப்பறும்
அரம்ப மாக்கள் ஆடும்
உரந்தவிர் நாளின் ஒழுகிலா நிகழ்வே!

### பொழிப்பு :

இதுவோ விழா எனப் பெறுவது; நகை விளைகின்றது. புதிய மடியுடைய மெல்லுடையைப் பெருமையுடன் உடுத்து, உழுந்தினது கொழுவிய மாவினால் செய்த புழையுடைய பண்ணியத்தை மூச்சு முட்ட உண்டு, பயறு பெரும்பான்மையுங் கலந்த பால் சேர்ந்த கும்மாயத்தை, வயிற்றின் மூக முழுதும் எழுந்து தோன்றும்படி ஆர வுண்டு, செயலற்றுத் திரிதரும் விலங்கு போல்வார் ஆடிக் களிக்கும், அறிவு விலக்கப் பெற்ற முறையிலாத செயலே!

### விரிப்பு :

இப் பாடல் புறம்.

புதிய உடையைப் பெருமையுடன் உடுப்பதுவும், பல பண்ணியங்களை வயிறு நிறையும்படி மாந்திச் செயலிலாது

விலங்கு போல் ஆரவாரத்தோடு ஆடிக் களிப்பதுவும் ஆகிய அறிவு தவிர்க்கப் பெற்ற முறையிலாத இச்செயல் நகைப்பிற் குரியதாகுமன்றி விழா எனப்படுவதாகாது என வலியுறுத்திப் பேசுவதாகும் இப் பாட்டு.

விழா என்று பொதுவிற் குறித்தமையான் குல சமய விலக்கின்றி நடைபெறும் எல்லா விழாக்களுக்கும் பொருந்துவதாகும் இக் கருத்து.

விழவு: விழு எனும் பகுதியடியாகப் பிறந்த சொல். விழு-சிறப்பு, உயர்வு.

விழா உயர்ந்த நோக்கமும் பொதுமைப் பண்பும் மக்களிடத்துப் பரவ வேண்டி அமையப் பெறுவதாகும். அவையன்றி உடுப்பதும் உண்பதும் ஆரவாரித்தலும் செயலற்றுத் திரிதலும் ஆகிய தாழ்வும் தந் நலமும் மிக்க நோக்கம் கொண்டு விளங்கும் விழாக்கள், முறையிலாத விலங்குச் செயல்களேயாம் என்று தெருட்டிக் கூறுவதாகும் இப் பாட்டு.

**புதுமடிக் கலிங்கம்:** புதிய மடியுடைய கலிங்கம்.

**கலிங்கம்:** ஆடை, கலிங்க நாட்டினின்று நெய்யப் பெற்று வந்ததாகலின் கலிங்கம் எனப் பெற்றது. பெரும்பாலும் மெல்லியதாக இவ்வாடை இருந்தமையான் மெல்லிய ஆடை என்று பொருளுரைக்கப் பெற்றது.

**கதுமை;**-பெருமை; கதும-பெருமையுற. புழலை-புழல் உடைய பண்ணியம். புழல்-தொளை. புழலை—வடை.

**முக்கி:** வயிறு முட்ட உண்டு; முக்குதல்-மூச்சு முட்ட உண்ணுதல்.

**தலைப்பெய்த:** தலையாகக் கலந்த, மிகுதியாகக் கலந்த.

**மிதவை:** கும்மாயம், கண்ணல் வகையினென்று.

பயறு அரிசி முதலியவற்றைப் பாலொடும் சருக்கரை யொடும் கலந்து அட்டிய நீர்மப் பண்டம் (பாயசம்). குமைதலால் **கும்மாயம்** என்றும், மிதத்தலால் **மிதவை** என்றும், கண் போல் உருண்டு திரளலால் **கண்ணல்** என்றும் பெயர்கள் பெறும். குமைதல்-குழைந்து வேதல்.

**வயிறு முகம்:** முன் வயிறு.

**மாந்துதல்:** நிரம்ப உண்ணுதல்.

**உயிர்ப்பு அறுதல்:** வினை யறுதல், வேலையற்றுத் திரிதல்.

**அரம்ப மாக்கள்:** குறும்பர்-ஒழுங்கிலா முரட்டு மாந்தர்.

அரம்பன்-Rogue எனும் ஆங்கிலச் சொல்லுக்கான பொருள் பொதிந்த தமிழ்ச் சொல்.

**உரந்தவிர் நாள்:** அறிவு தவிர்த்த நாள்.

பெரும்பாலான விழாக்கள் அறிவுக்குப் பொருந்துவன வாக அமையாதிருப்பது உன்னத் தக்கது.

**ஒழுகிலா நிகழ்வு:** முறையற்ற நிகழ்ச்சிகள்.

மூடப் பழக்கங்களே பெரும்பாலும் திருவிழாக்கள் எனும் பெயரால் பெரிதும் கொண்டாடப் பெற்று வருகின்றன. இவ் விழாக்களில் உண்பதும் உடுப்பதும் ஆரவாரிப்பதும் தவிர வேறு பயன்கள் இல்லை. அறிவுக்குப் பொருந்தாத இவ் விழாவெனும் முறையற்ற நிகழ்ச்சிகள் விழாவாகா. நகைப் பிற் குரியவாம் இவை-எனும் மெய்க் கருத்து தோன்றக் கூறியதாகும் இப் பாடல்.

இது புறத் திணையும் பொருண்மொழிக் காஞ்சி என் துறையுமாகும்.



பாவலரேறு பற்றிப் பாவேந்தர் . . .

கள்ளம் எப்படி அப்படிக்
கடுகளவும் இலாதநெஞ் சினர்முக்
கனிகள் எப்படி அப்படிப்
போன்றமுத் தமிழின்மே லன்பர்
குள்ளம் எப்படி அப்படி
இலாப்பெருங் கொள்கை யுடையார்
குரைகடல் எப்படி அப்படிக்
குணநிறை துரைமாணிக் கனர்
வெள்ளம் எப்படி அப்படிச்
செந்தமிழ்ச் சொற்பெருக் கேற
மேன்மை எப்படி அப்படிப்
பட்டதோர் நடையிற்றம் நல்ல
உள்ளம் எப்படி அப்படித்
தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்
உலகம் எப்படி அப்படிப்
பட்டதோர் நிலைகொள்கொய் யாக்கனியே !

— பாரதிதாசனர்

மறைமலை அச்சகம், புன்செய்ப் புளியம்பட்டி-638459